# நேசரின் ஒளி

# Nesarin Oli


| மலர்5 | இதழ்9 | இலவசப்பிரதி | ஜூலை2018 |
|---|---|---|---|
| Volume 5 | Issue 9 | Free Publication | July 2018 |




## கர்த்தர் உனக்கு துணையாயிருப்பார்.

(ஆதி 49:25)


Rev.V. இஸ்ரவேல் தேவதாசன்

முகவரை

## ஜூலை மாதத்தின் வாக்குத்தத்தம்

# கர்த்தர் உனக்கு துணையாயிருப்பார்

(ஆதி 49:25)

கிறிஸ்துவின் அன்பான தேவனுடைய பிள்ளைகளே இந்த ஜூன் மாத பத்திரிக்கையை வெளியிட தேவன் பாராட்டிய பெரிய கிருபைக்காக கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்குகிறேன். இதை வாசிக்கும் பிள்ளைகளை ஆசீர்வதித்து பெலப்படுத்தி சகாயஞ்செய்வாராக. உங்களை பரிபூரணத்திற்க்குள்ளாக கொண்டு வருவாராக.

இப்பொழுதும் பரிட்சை எழுதின மாணவர்களுக்காக நாம் உபவாசத்துடன் ஜெபித்தோம். அனைத்து மாணவர்களும் தேர்வில் வெற்றி பெற்று நல்ல மதிப்பெண்கள் பெற தேவன் உதவி செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

மே மாதம் நடைபெற்ற சிறுவர் ஊழியத்தில் 250 மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்று தேவனை அறிந்து கொண்டார்கள். இந்த ஊழியத்தலும் ஆசிரியர்கள், உதவியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறுவர் ஊழியம் சிறப்பாக நடைபெற உதவி செய்தார்கள். இந்த ஊழியத்தில் உதவி செய்த அனைவருக்காகவும் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அதன் தேவைகள் எல்லாவற்றையும் தேவன் சந்தித்தார். தேவனுக்கு கோடான கோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

வெளி ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். ஊத்துக்குளி, குறிஞ்சிநகர், கொளத்தூர், பெரியார்நகர், மெஞ்ஞானபுரம், திருச்செந்தூர் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். எல்லா இடங்களிலும் தேவன் கிரியை செய்து வருகிறார். சுவிசேஷம் செல்ல முடியாத எல்லா இடங்களிலும் தேவனுடைய சுவிஷேம் செல்லும்படியாக ஜெபிப்போம். தேவன் ஏராளமான சாட்சிகளை உண்டாக்கி இருக்கிறார். அதற்காக தேவனை மகிமைப்படுத்துவோம்.

தேவன் நமக்குத் தந்தருளின எல்லா ஊழியங்களுக்காகவும், விசேஷமாக 24 மணி நேர ஜெப ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள். கட்டப்பட்டுள்ள மக்கள் விடுதலை பெறவும், பிரிந்திருக்கும் குடும்பங்கள் ஒன்று சேரவும், கடன் பிரச்சனையில் உள்ளவர்களுக்காகவும், வழக்குகளில் உள்ள பிள்ளைகள் விடுதலை பெறவும் விசேஷமாக கேன்சர் வியாதி மற்றும் விஷ ஜூரம் உள்ளவர்களுக்காகவும், உபவாசத்துடனும், கண்ணீருடனும் ஜெபியுங்கள். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தி, சாட்சியான வாழ்க்கை வாழ ஒவ்வொருவருக்காகவும் ஜெபிப்போம்.

ஒவ்வொருவரும் ஐக்கியமாக இருக்கவும், தேசத்தில் நடக்கும் மதக்கலவரங்கள், போராட்டங்கள், தற்கொலைகள் மாறவும் ஊக்கமாக ஜெபியுங்கள். தேசத்தலைவர்கள், மதத்தலைவர்கள், அரசாட்சி செய்பவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படவும், இந்திய தேசத்தில் சமாதானம் உண்டாகவும், அதிகமாக ஜெபிப்போம். எல்லா திருச்சபைகளும் ஒன்று சேர்ந்து தேவனை தொழுதுக்கொள்ளும்படியான காலங்களும், சமயங்களும் உண்டாகும்படி ஜெபிப்போம் ஜெயமோ கர்த்தரால் வரும்.

தேவ பணியில்

*Rev.V. இஸ்ரவேல் தேவதாசன்*



ஆசிரியர்
Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்
Publisher & Editor

சிறப்பு இலவசப்பிரதி

அடிச்சிட்டோர்
அன்பு அச்சகம்

**நோக்கம்**
பாவம் செய்து நரகத்திற்கு போகும் ஜனங்களைத் தடுத்து தேவ ராஜ்யத்திற்கு செல்ல அவர்களை ஆயத்தம் செய்வது

**முகவரி**
ஆத்ம நேசர் ஜெப ஐக்கியம்
எண் 2 -106, அகரம் மெயின் ரோடு,
அகரம் தென், சேலையூர்,
சென்னை - 600 073.
தொடர்புக்கு
044 - 2229 4056 / 2689
94440 30053 / 94440 30903




# நான் உனக்குத் துணையானவர்

எனக்கு அன்பான தேவ பிள்ளைகளே! நாம் ஆராதிக்கிற இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் மாறாதாவர். மட்டுமல்ல! நம்மை மாற்றுகிறவராயுமிருக்கிறார். எதிலிருந்து மாற்றுகிறர் எப்படி மாற்றுகிறார் என்பதைப் பற்றி அறிந்து கொள்ளலாம். மனிதனின் இருதயம் கேடும் திருக்கும் நிறைந்ததாய்க் காணப்படுகின்றது. நம்மோடு வாழும் மக்கள் நான் உன்னை திருத்திவிடுவேன்; நான் உனக்குத் துணை செய்வேன் என்று சொன்னாலும் அதில் உண்மை இருக்காது. மனம் மாறி, மறந்து விடுவார்கள். ஆனால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறஸ்து மட்டும் நமக்குத் துணை நிற்பவராய் வார்த்தையில் உண்மையுள்ளவராய் காணப்படுகிறார்.

கர்த்தர் ஆபிரகாமைப் பார்த்து, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்.அப்படியே அவன் சந்ததியைப் பெருகப்பண்ணியதை நாம் அறிந்திருக்கிறோம். யாக்கோபு தன்னுடைய கடைசி நேரத்தில் தன் பிள்ளைகளை அழைத்து, கடைசி நாட்களில் நேரிடும் காரியங்களைப் பற்றிக் கூறினான். யோசேப்பின் முறை வந்த போது நீ கனிதரும் செடி, வில் வீரர் உன்னை மனமடிவாக்குவார்கள். ஆனாலும் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் உன் புயங்கள் பலமடையும். இது எப்படி ஆயிற்று? உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று; அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று. அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும் கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும் ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார் என்றான் (ஆதி 44:25)

துணை என்னும் வார்த்தை மிகவும் மேன்மையானது. இந்த உலக வாழ்க்கையில் நாம் தனித்து வாழ முடியாது. பெற்றோர்களின் துணை முதன்மையானது. உடன் பிறப்புகளின் துணையும் தேவையானது. சமுதாயத்தின் துணையும் அவசியமானது. இந்தத் துணை எல்லாம் நம்மை விட்டு விலகி விடும். ஆனால், தேவனின் துணை மட்டும் நம்மை முடிவுபரியந்தம் காக்க வல்லது. ஆகையால்தான், யாக்கோபு யோசேப்பை பார்த்து, கர்த்தர் உனக்குத் துணையாயிருப்பார் என்றான். தன் சொந்த சகோதரர்களே

## உள்ளே

01. தேவ செய்தி
07. சாட்சிகள்
12. யார் பாக்கியவான்
15. தியாகச்செம்மல்கள
19. பகிர்ந்து வாழ்தல்
21. வேத வாசிப்பு
22. தொடங்கிடு நிலைத்திடு வென்றிடு
25. OBEDIENCE IS BLESSING
31. சபை ஆராதனை ஒழுங்குகள்

பொறாமையினால் அவனைக் கொல்ல நினைத்து குழியில் போட்டனர். கர்த்தர் பாதுகாத்தார். மட்டுமல்ல, இருபது வெள்ளிக்காசுக்கு இஸ்மவேலரிடம் விற்றுப்போட்டார்கள். பின்பு போர்த்திபாரின் கையில் விற்கப்பட்டான். இவையெல்லாவற்றிலும், யோசேப்பு உண்மை உள்ளவனாய் இருந்ததினால், கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரிய சித்தியுள்ளவனானான். சிறையில் போடப்பட்டாலும் தன் உண்மையில் நிலைத்து நின்றான். தேவபிள்ளைகளே! எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தாலும் தேவன் மேலுள்ள விசுவாசத்தை விடாதிருங்கள். உண்மையுள்ளவர்களாயுமிருங்கள்.

**வலதுபுறத்தில் துணையாக இருக்கிறார்:-**

திருமணத்தின் போது பெண்ணின் வலது கையைப் பிடித்து மணமகன் வாக்குக் கொடுப்பான். அது முடிவுபரியந்தம் காணப்படமாட்டாது. ஆதாமுக்கு ஏற்ற துணையைக் கொடுத்த தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கும் ஏற்ற துணையைத் தான் தருகிறார். ஆனாலும், அது நிலைத்து நிற்பதில்லை. கோரேசின் வலது கையைப் பிடித்து கர்த்தர் நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன் என்று வாக்குக் கொடுத்தார். அப்படியே செய்தார். அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர் என்று சங் 33:20லும், தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர் என்று சங் 46:1லும், தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர் என்று சங் 40:17லும் சங்கீதக்காரன் கூறுவதன் மூலம் அவரே நமக்குத் துணை, அவரது செட்டைகளின் நிழலே நமக்கு ஆதரவு என்பதை அறியலாம்.



**ஆபத்துக்காலத்தில் துணை:-**



ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன் என்றார். ஆபத்துக்காலத்தில் நமக்கு உதவி செய்கிற கன்மலையாக இருக்கிறார். பூமி நிலைமாறினாலும் மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும் நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற தேவமனிதன் ஒருவர் வாழ்ந்து வந்தார். இரவில் படுக்கும் போது பால் குடிப்பது அவருடைய பழக்கமாக இருந்தது. ஒரு நாள் மனைவி வைத்துச் சென்ற பாலைக் குடிக்க மறந்து படுத்து விட்டார். திடீரென்று பாதித் தூக்கத்தில் விழிக்கும்போது பால் குடிக்கவில்லை என்ற நினைவு வந்தது குடிக்க வேண்டும் என்று மனதில் தோன்றினாலும் ஏதோ ஒரு சக்தி அவரைத் தடுத்தது. அதனால், குடிக்காமலேயே தூங்கி விட்டார். காலையில் எழுந்து பார்த்த போது, அந்தப் பாலில் ஒரு தேள் இறந்து கிடந்ததைக் கண்டு தேவனைத் துதித்தார். இதுதான் தேவனின் வல்லமை.

தேவனே நேரில் வந்து உதவி செய்வார் என்று நினைக்கக்கூடாது. தமது தூதன் மூலமாக உதவி செய்வார். ஆகார், நாச்சியாரால் துரத்திவிடப்பட்ட போது, வனாந்திரத்தில் குழந்தை சாவதைத் பார்க்க முடியாமல் தூரத்தில் சென்று அழுதாள். தேவன் தனது தூதனை அனுப்பி அவளை தேற்றி ஒரு துரவைக் காட்டினார். துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளை

க்குக் குடிக்கக் கொடுத்தாள். தேவ பிள்ளையே, உன் பிள்ளையின் நிமித்தமதாகக் கண்ணீர் வடிக்கிறாயா? கூடிய சீக்கிரத்தில் உனக்கும் ஒரு துரவைக் காட்டுவார்.

நீ உன்னுடைய ஆபத்துக்காலத்தில் கூப்பிடும் போது பரலோகமே உனக்காக இறங்கிவரும். உனக்காக ஜனங்களை அனுப்புவார். வாக்குத்தத்தம் கொடுத்து துணை செய்வார். ஆனால், நாம் செய்ய வேண்டியது என்ன? நாம் விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று எண்ண வேண்டும். யோசேப்பின் வில் உறுதியாக இருந்தது. ஜெபத்திலே, வேதம் வாசிப்பதிலே, தியானிப்பதிலே, உபவாசத்திலே, தேவனுக்குக் கொடுப்பதிலே உறுதியாக இருக்க வேண்டும். ஆராதனையை அசட்டை பண்ணக்கூடாது. யோபு தன் உத்தமத்திலே உறுதியாக இருந்தான். பிறரிடமிருந்து இலஞ்சம் வாங்க மாட்டேன் என்பதிலே உறுதியாக இருக்க வேண்டும். கள்ளத்தராசு கூடாது. இது தேவனுக்கு அருவருப்பானது. தாவீது தன் உத்தமத்திலே நிலைத்திருந்து கர்த்தரை எக்காலத்திலும் துதிப்பேன் என்று சொல்வதோடு மட்டுமல்ல; பொல்லாப்புக்குப் பயப்படேன் என்றான். சங் 91-ல் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு வசனத்தையும் நமக்கு உரிமையாக்கிக் கொள்ள வேண்டும். ஆகையால், ஆபத்துக்காலத்தில் உண்மையாகவே நமக்குத் துணையாக இருப்பார்.



**யுத்தத்தை நடத்துவதில் துணை:-**

யுத்தம் என்று சொன்னவுடன் ஈட்டி, வில், அம்பு, வாள் எடுத்து போருக்குச் செல்வது என்று அர்த்தமல்ல. நம்முடைய அன்றாடக வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் போராட்டங்களைச் ஜெயிப்பதுதான் யுத்தம். இந்தப் போராட்டம் நம்முடைய பாவங்களின் நிமித்தமாக வரலாம்; பிசாசின் தந்திரங்களால் வரலாம்; சில சமயம் நம்மைச் சோதிக்கும் படியாக தேவனே அனுப்பியதாக இருக்கலாம். எது எப்படியாக இருந்தாலும் நாம் அதைச் ஜெயிக்க வேண்டும்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை நடத்திச் சென்றபோது, மக்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். எகிப்தியர் பின் தொடர்ந்து வருவதைக் கண்டு கலங்கினார்கள்; ஆனாலும் மோசே மக்களை பார்த்து பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்; கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மா இருப்பீர்கள் என்றான் (யாத் 14:13, 14). இதை வாசிக்கிற மகனே மகளே, உன் சத்துருக்களைப் பார்த்து பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறாயோ? உனக்கு விரோதமாக வைக்கப்பட்டுள்ள செய்வினை, பில்லி சூனியம், மந்திரக்கட்டுகளை நினைத்து மனம் கலங்கிக் கொண்டிருக்கிறாயோ? கலங்காதே! உன்னை உருவாக்கிய, அழைத்த தேவனைப் பார். உலகத்தில் இருப்பவனை விட உன்னோடு இருப்பவர் பெரியவர் என்பதை மட்டும் மறந்து விடாதே. அவரே உனக்காக



யுத்தம் பண்ணுவார்.

அசீரியா இராஜா எசேக்கியாவோடு போர் செய்ய வந்த போது, எசேக்கியா நகரத்துக்குப் புறம்பேயிருந்த ஊற்றுகளைத் தூர்த்துப் போட்டான். திடன் கொண்டு இடிந்த மதில்களைக் கட்டி, உயர்த்தினான். கோட்டையைப் பலப்படுத்தினான். ஜனத்தின் படைத்தலைவரை கூடிவரச் செய்தான். நீங்கள் திடன் கொண்டு தைரியங்கொண்டு, பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். அவனோடு இருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். அவனோடிருக்கிறது மாம்ச புயம்; துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்துகிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் என்று சொல்லி அவர்களைத் தேற்றினான்.

அசீரியாவால் அனுப்பப்பட்ட ஊழியக்காரருக்கும் பயப்படாமல் தீர்க்கதரிசி ஏசாயாவோடு சேர்ந்து வானத்தை நோக்கி அபயமிட்டான். அப்பொழுது கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அசீரியா ராஜாவின் சேனைகளை அதம் பண்ணினார். அசீரியா இராஜா செத்த முகமாய்த் திரும்பிப் போனான். தேவ பிள்ளையே! எதிரியைப் பார்த்து கலங்காமல் எசேக்கியா இராஜா செய்தது போல நம்முடைய குறைகளை சரிசெய்து, திருத்த வேண்டிய காரியங்களைத் திருத்தி வானத்துக்கு நேராக நம்முடைய கண்களை ஏறெடுத்து கூப்பிட்டால், அவரே நமக்காக யுத்தம் செய்ய ஒரு தூதனை அனுப்பி ஜெயம் கொடுப்பார். கலங்க வேண்டாம். தாவீது பெலிஸ்தியனாகிய கோலியாத்தை எவ்வாறு ஜெயித்தான்? எந்த பெலத்தோடு சென்றான்? கர்த்தர் ஈட்டியினாலும் பட்டயத்தினாலும் இரட்சிக்கிறவர் அல்ல. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் சென்றான். யுத்தம் கர்த்தருடையது. அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான். ஜெயமும் பெற்றான். அதனால்தான் தான் எழுதிய சங்கீத புஸ்தகத்தில் சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்றான்.

யோசபாத் என்பவன் பாகால்களைத் தேடாமல் தன் தகப்பனுடைய தேவனைத் தேடி அவருடைய கற்பனைகளின்படி நடந்ததால், கர்த்தர் அவனோடிருந்தார். அவனுக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியாயிருந்தது. மோவாப் புத்திரரும் அம்மோன் புத்திரரும் யோசபாத்துக்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்தார்கள். யோசபாத் சற்று பயந்தாலும், கர்த்தரை ஒருமனதோடு தேடினான். நீங்கள் அவர்களுக்குப் பயப்பட வேண்டாம். இந்த யுத்தம் உங்களுடையதல்ல; கர்த்தருடையது என்று ஆவியானவர் கூறியதைக் கேட்டு யோசபாத் தரைமட்டும் குனிந்து வணங்கினான். பாடகர் குழுவை ஏற்படுத்தினான். கர்த்தர் நல்லவர்; அவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது என்று பாடி ஜெயமும் பெற்றான். நாமும் தேவனைத் தேடித் துதித்தால் கர்த்தரே நமக்காக யுத்தம் பண்ணுவார் சந்தேகமில்லை.



**விடுவிக்கிற துணை:-**

பிரதான தீர்க்கதரிசிகளில் ஒருவன் தானியேல் இவன் இராஜகுலத்தைச் சார்ந்தவன். நேபுகாத்நேச்சாரால் சிறையாகக் கொண்டுபோகப்பட்டவன். சொப்பனங்களுக்கு அர்த்தத்தைச் சொல்லும் வரம் தானியேலுக்கு இருந்தது. தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பணணும் திராட்சை ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தாதபடிக்குக் காத்துக் கொண்டான். தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான். ஆனால் பிரதானிகள் தானியேலைக் குற்றப்படுத்த வகைத்தேடினாாகள். இராஜாவைத் தவிர வேறு தேவனை சேவிப்பவர்களைச் சிங்கக் குகையில் போடப்பட வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ராஜாவுக்கு

விருப்பம் இல்லாமல் இருந்தாலும் ஒத்துக்கொண்டார். தானியேலைக் சிங்கக் கெபியில் போடக் கட்டளையிட்டான். ஆனால் சிங்கங்கள் தானியேலை சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி தப்புவித்தார்.

அதுமட்டுமல்ல, இராஜாவாகிய நேபுகாத் நேச்சாரால் செய்யப்பட்ட சிலை ஒன்றை அனைவரும் வணங்க வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வணங்காதவர்களை எரிகிற அக்கினி சூளையில் போடவேண்டும் என்று ஆணையிடப்பட்டது.



சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை என்ற மூவரும் வணங்க மறுத்த போது அக்கினி சூளையில் போடப்பட்டனர். அவர்களுக்கு ஏழுமடங்கு அதிகச் சூடாக்கக் கட்டளையிட்டான். நாங்கள் ஆராதிக்கும் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர் என்ற நம்பிக்கையோடு இருந்ததால் அக்கினியின் வாசனை கூட அவர்களை அண்டவிடாதபடிக்கு தேவனால் அனுப்பப்பட்ட தூதனானவர் அவர்களோடு உலாவி வந்தார்.

என்ன ஆச்சரியம் பாருங்கள்! நான் இடைவிடாமல் ஆராதிக்கும் தேவன் என்று, தானியேல் போல, நம்மால் சொல்ல முடியுமா? இல்லையென்றால் விட்டு விட்டு சமயம் கிடைக்கும் போது மட்டும் ஆராதிக்கின்றோமா? தானியேலைப் போல நாமும் ஒரு ஜெப வீரனாக மாறுவோம்! விடுதலையைப் பெற்றுக் கொள்வோம். தானியேல் சத்தியத்தை அறிந்து பின்வாங்காமல் செயல்பட்டதால் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள முடிந்தது. கர்த்தரே ஆவியானவர்;

**கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு 2கொரி 3:17**

**தூக்கிவிடும் துணை:-**

தூக்கிவிடும் உதவி யாருக்குத் தேவை? கீழே விழுந்தவர்களுக்கு அல்லவா? உலகப்பிரகாரமான வாழ்க்கையில் நடக்கும்போதோ, ஓடும்போதோ கல் தடுக்கி கீழே விழுந்தால், பெரியவர்களாக இருந்தால் தானாக எழும்புவார்கள். சிறு குழந்தைதகளாக இருந்தால், அவர்களுக்குப் பெரியவர்களின் உதவி தேவை. ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் விழுந்தால் நம்மை தூக்கி விடுவது யார்? நமக்காகப் பேச, ஜெபிக்க போதகர்களும் பெற்றோர்களும் இருந்தாலும் நம்மை நாம் ஒப்புக்கொடுக்கும்போது தான் கர்த்தர் நம்மைத் தூக்கிவிடுவார். சங் 37 ஐப் படித்து பார்த்தால் நமக்குப் புரியும். துன்மார்க்கனுக்கும் நல்ல மனுஷனுக்கும் உள்ள வேறுபாட்டைக் கர்த்தர் காட்டியுள்ளார். துன்மார்க்கன் அறுப்புண்டு போவான். ஆண்டவர் அவனைப் பார்த்து நகைப்பார். அவனுடைய புயங்கள் முறியும். அவர்கள் புகையாய்ப் புகைந்து போவார்கள் என்று கூறியுள்ளார். அதே சமயத்தில் நீதிமான்களைப் பற்றிக் கூறும்போதோ, பூமியைச் சுதந்தரித்து சமாதானமாயிருப்பார்கள், அவனைக் கர்த்தர் தாங்குகிறார், ஆபத்துக் காலத்தில் வெட்கப்பட்டு போகமாட்டார்கள், அவனுடைய வழியில் கர்த்தர் பிரியமாயிருப்பார், அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால்



அவனைத் தாங்குகிறார் சங் 37:24 என்று கூறியுள்ளார். ஆகவே கர்த்தர் நம்மைத் தூக்கி விட வேண்டுமென்றால் நாம் கர்த்தர் விரும்பும் நீதிமானாகக் காணப்பட வேண்டும். நீதி 24:16-ல் பார்த்தாலும் கர்த்தர் அதையே வலியுறுத்துவதைக் காணலாம். *"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்"*. இதையறிந்த கள்ளனும் தான் சிலுவையில் அறையப்பட்டபோது, இயேசுவை நோக்கி; ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி; இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று சொன்னார். கள்ளனாக இருந்தாலும் மனந்திரும்புகிறவர்களைத் தூக்கிவிடுகிறவராக இருக்கிறார். அப்படியென்றால் உன்னையும் மன்னித்து தூக்கிவிடுவார் என்பதை மறந்து விடாதே.

**பெலப்படுத்தும் துணை:-**



என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு பிலி 4:13. நம்மை ஏன் பெலப்படுத்த வேண்டும்? எப்போது பெலப்படுத்த வேண்டும்? நான் தனியனாக இருந்தேன்; ஒருவனும் என்னோடுகூட இருக்கவில்லை; எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள். கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று என்னாலே ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட என்னைப் பலப்படுத்தினார். சிங்கத்தின் வாயிலிருந்தும் இரட்சிக்கப்பட்டேன் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுவதனால் நாம் தனித்து இருக்கும் போது, துன்பத்தின் மத்தியில் செல்லும் போது நம்மைப் பெலப்படுத்த ஒருவர் தேவைப்படுகிறார். அவரே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

எலியாவின் வாழ்க்கை நாம் அறிந்த ஒன்றுதான். அவன் சோர்ந்து போய் போதும் ஆண்டவரே என ஜீவனை எடுத்துக் கொள்ளும் என்று சொன்ன போது, கர்த்தருடைய தூதன் நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்று உற்சாகப்படுத்தினான். இதனால் சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்து போகார்கள் என்பதை ஏசா 40:29, 31 மூலம் அறியலாம்.

கர்த்தர் நம்மைப் பெலப்படுத்தி துணை செய்வதினால் நம்மோடு வழக்காடுகிறவர்களை ஒரு வஸ்திரத்தைப் போல் பழசாக்கி, பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும்படி செய்வார். மேலும், நம்மை உன்னதத்திலிருந்து வரும் பெலனால் நிரப்புவார். அதை ஒருவராலும் தடுக்க முடியாது. ஏன் அத்தகைய பெலனால் நம்மை நிரப்புகிறார்? அந்த பெலனில் நிறைந்துள்ள பரிசுத்த ஆவி நம்மிடம் வரும் போது நாம் பெலத்தின் மேல் பெலனடைந்து சீயோனிலே காணப்பட வேண்டும். மட்டுமல்ல, இந்தப் பூமியிலே எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் அவருக்குச் சாட்சிகளாக வாழ வேண்டும் என்பதே அவருடைய ஆசை. தேவ பிள்ளைகளே! கர்த்தரே எனக்குத் துணை என்பதை அறிந்து அவர் சித்தத்தின்படி செய்து அவரை மனமகிழ்ச்சியடையச் செய்வதே நமது நோக்கமாக இருக்கட்டும். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் அன்பு
சகோதரன் *Rev.V. இஸ்ரவேல் தேவதாசன்*




## அற்புதங்களின் தேவன்

**சகோதரி. அன்னாள்,** பட்டாபிராம்

நாங்கள் அதிக போராட்டம், பிரச்சனையுடன் தான் இந்த ஜெபத்திற்கு வந்தோம். தொடர்ந்து ஐயா எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்தார்கள். கர்த்தர் பிசாசு போராட்டத்திலிருந்து விடுவித்தார். அநேக வருடங்களாக சொந்த வீட்டிற்குள் செல்லமுடியாத சூழலில் பயங்கர போராட்டத்திற்குள் இருந்தோம். ஐயா எங்கள் வீட்டிற்கு வந்து ஜெபித்தார்கள். கர்த்தர் எங்களை விடுவித்து, சொந்த வீட்டிற்கு செல்ல கிருபை செய்தார். பிரிந்திருந்த மகனின் குடும்பத்தை கர்த்தர் இணைத்தார். என் கால்களில் காணப்பட்ட புண்களையும் கர்த்தர் குணமாக்கி எங்களுக்கு அற்புதம் செய்துள்ளார். எங்களுக்கு விடுதலை கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயா, அம்மாவுக்கு நன்றி!

## வார்த்தையை நிறைவேற்றின தேவன்

**சகோதரி. ஷீலா,** கடப்பேரி

நான் 10 மாதங்களாக ஜெபத்திற்கு வருகிறேன். 6 மாதமாக என் வீடு வாடகைக்கு போகாமல் இருந்தது. நான் ஆலோசனை ஜெபத்திற்கு வந்து சொல்லி ஜெபித்து சென்ற அன்றே வீட்டிற்கு ஆள் வர கர்த்தர் கிருபை செய்தார். எங்கள் வீட்டில் ஆடுகளை வளர்த்து வருகிறோம். ஒரு நாளில் 13 குட்டிகள் ஒரு நாளில் 7 குட்டிகளும் இறந்துவிட்டது. ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். "பொருத்தனை பண்ணி ஜெபி" என்று சொன்னார்கள்.அதன்படி ஜெபித்து காணிக்கை செலுத்தினேன். கர்த்தர் பாதுகாத்து வருகிறார். ஜனவரி மாதம் கர்த்தருடைய வார்த்தை "இன்னும் எட்டு நாளில் உனக்கு நல்ல செய்தி வரும்;" என்று கர்த்தர் பேசினார். அதை வைத்து ஜெபம் பண்ணினேன். எட்டாவது நாளில் ஒரு




போன் வந்தது. அதில் உங்களை நாங்கள் பெண் பார்க்க வருகிறோம் என்று பேசினார்கள். ஒரு வருடமாகவே வருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் வரவில்லை. ஆனால் அன்றே

கர்த்தரின் வார்த்தையின்படி வந்து பார்த்து விட்டு சென்றார்கள். "சீக்கிரத்தில் சுகசெய்தி உண்டு. நீ சந்தோசமாயிரு" என்று கர்த்தர் பேசினார். அதன்படி அந்த வீட்டாரும் போன் பண்ணும்படி கர்த்தர் கிருபை செய்தார். வார்த்தையை நிறைவேற்றி அற்புதம் செய்துவிடும் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## அற்புதங்களின் தேவன்

**சகோதரி. ராகேல்,** இரத்தினமங்களம்



இந்த இடத்திற்கு வந்த பின்பு கர்த்தர் எங்களுக்கு எவ்வளவோ நன்மைகளை செய்துள்ளார். என் மகளின் திருமணத்தடைகளை மாற்றி கர்த்தர் நல்ல ஒரு திரு-மண வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்தார். பத்தாம் வகுப்பில் எப்படி பாஸ்பண்ணுவேன் என்ற நிலைமையில் இருந்து என் மகனை இங்கு கூட்டி வந்து ஜெபித்தேன். கர்த்தரின் கிருபையால் பாஸ்பண்ணவும், வருடத்திற்கு 1 லட்சத்து 10 ஆயிரம் பீஸ் கட்டி படிக்கவும் கர்த்-தர் எங்களுக்கு கிருபை செய்துள்ளார். மேலும் எனது மகளுக்கு கர்ப்பத்தின் கனிக்காக ஜெபித்தோம். கடந்த நாட்களில் கர்த்தர் எங்கள் மனவிருப்பத்தின்படி கிறிஸ்துமஸ் அன்று ஆண் குழந்தையை பெற்றெடுக்க கிருபை செய்தார். ஆப்ரேஷன் தான் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறி, தியேட்டருக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். ஆனால் ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தையை சுகப்பிரசவம் தருவேன் என்று வந்தது. ஐயாவிடம் போனில் ஜெபித்தோம். நாங்கள் எங்களுக்கு செய்த எல்லா நன்மைகளுக்காக கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி. அற்புதம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## இயேசுவின் இரத்தத்தினால் விடுதலை



**சகோதரி.மாலதி,** மேடவாக்கம்

நான் இயேசுவின் இரத்-தம் தெளிப்பதின் மேன்மையை ஐயா பிரசங்கம் மூலம் தெரிந்து கொ-ாண்டேன். அதன்படி இயேசுவின் இரத்தத்தைஎங்கள் வீட்டில் தெளித்தேன். தெளிக்கும் போது ஏதோ ஓர் கருத்த உருவம் என்னோடே போராடியது. அப்போது பயப்படாதே நான் உன்னோடே இருக்கிறேன் என்ற கர்த்தருடைய குரலை கேட்டேன். தொடர்ந்து இயேசுவின் இரத்தத்தை தெளித்து வருகிறேன். போராட்டம், பில்லி சூனியம் இவற்றிலிருந்து விடுதலை பெற்று வருகிறேன். ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபிதது வரும் ஐயாவுக்கு நன்றி!

## ஞானம் தரும் தேவன

**சகோதரி.அமல்,** வியாசர்பாடி



நாங்கள் இங்கு வந்து எத்தனையோ நன்மைகள், விடுதலையை தகப்பன் ஜெபத்தின் மூலம் பெற்றுக்கொண்டோம். என் மகள் பில்லி சூனியத்தில் பாதிக்கப்பட்டிருந்தாள். அவள் படிக்கக்கூடாது என்று செய்யப்பட்ட கிரியை, அவரால் நடக்க முடியாது. படிக்க முடியாது முழுவதும பாதிக்கப்பட்டவளாய் இருந்தாள். நாங்கள் தொடர்ந்து ஐயாவிடம் ஜெபிக்க கூட்டி வந்தோம். ஐயா பாரத்தோடு எங்களுக்காக ஜெபித்தார்கள். எங்கள் வீட்டிற்கும் வந்து ஜெபித்தார்கள். தேவன் எல்லா போராட்டத்தையும் மாற்றி, என் மகள் எம்.காம் படிப்பு வரை படிக்க கிருபை செய்தார். ஜெயம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## வேலையை கொடுத்த தேவன்

**சகோதரி. சுசித்ராபேகம்,** சென்னை

என் மகள் இன்ஜினியரிங் படிப்பு முடித்திருந்தாள். ஆனாலும் வேலை இல்லாமல் இருந்தாள். நான் ஐயாவிடமும், அம்மாவிடமும் சொல்லி ஜெபித்தேன். இந்த சென்னை முழுவதும் இன்டர்வியூ சென்றும் வேலை இல்லாமல் இருந்தாள். நான் தினமும் அவளை இயேசப்பாவிடம் ஒப்புக்கொடுத்து ஜெபித்தேன். கர்த்தர் மனமிரங்கி எல்லா தடைடையும் மாற்றி டிசிஎஸ்-ஸில் நல்ல வேலை கொடுத்துள்ளார். வேலையை கட்டளையிட்ட தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## ஜீவனை காத்து வரும் தேவன்



நான் ஐம்பது வருடம் மும்பையில் வேலை பார்த்து ஓய்வுபெற்று, கிராமத்தில் வந்து, விவசாயம் செய்து வருகிறேன். இந்த ஐம்பது வருட காலத்தில் எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பயங்கர பில்லி சூனியத்தினால் என் சகோதரர்கள் நான்கு பேரும் இறந்துவிட்டனர். இன்று வரையும் தேவன் என்னை பாதுகாத்து வந்திருக்கிறார். ஏனெனில் பத்து வருடம் முன்பு ஐயாவிடம் ஜெபிக்க வந்திருந்தேன். ஐயா ஜெபித்து விட்டு "நீ தினமும் இரவு நடுநிசியில் (12 ஆம் மணி வேளையில்) ஜெபிக்க வேண்டும்" என்று சூனியத்தினால் என் சகோதரர்கள் நான்கு பேரும் இறந்துவிட்டனர். இன்று வரையும் தேவன் என்னை பாதுகாத்து வந்திருக்கிறார். ஏனெனில் பத்து வருடம் முன்பு ஐயாவிடம் ஜெபிக்க வந்திருந்தேன். ஐயா ஜெபித்து விட்டு "நீ தினமும் இரவு நடுநிசியில் (12 ஆம் மணி வேளையில்) ஜெபிக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அதன்படி இன்றுவரை செய்து வருகிறேன். தேவ கிருபையினால் என்னை பாதுகாத்து வருகிறார். ஜீவனை பாதுகாத்து வரும் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## பூரண விடுதலை கொடுத்த தேவன்

**சகோ. மோகன்,** கொடுங்கையூர



எனது பெரிய மகளுக்கு சரீரத்தில் உட்காரும் இடத்தில் சிறிய வேர்க்குரு போல ஏற்பட்டு, பின் சின்ன சின்ன கட்டியாக வந்துவிடும். பின் மருத்துவரிடம் சென்று ஆப்ரேசன் செய்து, பின் ஆறுவதற்குள் நாட்களாகிவிடும். இப்படியாக தொடர்ந்து நான்கு வருடம் இந்த கட்டியினால் கஷ்டப்பட்டு வந்தாள். ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். கர்த்தருடைய வார்த்தை "இது போராட்டம், தொடர்ந்து 21 நாட்கள் குடும்பமாக இரவு உபவாசம் இருந்து ஜெபியுங்கள்" என வந்தது. நாங்களும் அப்படியே செய்தோம். தேவன் அற்புதமாக அந்த கட்டியை குணமாக்கினார். மருத்துவர்கள் பார்த்துவிட்டு ஆப்ரேசன் தேவையில்லை என்று கூறிவிட்டார்கள். தேவன் பூரண சுகம் தந்தார். சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். எனக்கு தொடர்ந்து ஜெபித்து வரும் ஐயாவுக்கு நன்றி!

## அற்புத சுகம் கொடுத்த தேவன்

**சகோ. ஜான்சன்,** சென்னை



எனது மகள் அமெரிக்காவில் குடும்பமாக இருந்தாள். அவளது மகளுக்கு திடீரென்று வாந்தி ஏற்பட்டுவிட்டது. ஐந்து வயதான பேத்திக்கு ஓரே நாளில் தொடர்ந்து வாந்தி ஏற்பட்டதால், ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். கொடுக்கப்படும் மருந்தும் வெளிவந்தது. இந்நிலையில் நாங்கள் அதிகாலையில் ஐந்தரை மணிக்கு ஐயாவிடம் போன்பண்ணி ஜெபித்தோம். ஜெபித்த ஒரு மணி நேரத்தில் என் பேத்திக்கு எந்த வாந்தியும் இல்லாமல் பூரண சுகம் கர்த்தர் கொடுத்தார். சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயா, அம்மா குடும்பத்தினருக்கு நன்றி!

## திருமண தடையை மாற்றின தேவன்

**சகோதரி. மேரி,** சோலைகுடியிருப்பு



நான் திருச்செந்தூர் அப்பொல்லா கம்ப்யூட்டர் சென்டரில் மாதம் ஒரு முறை நடக்கும் ஜெபத்தில் மூன்று வருடம் கலந்து கொண்டு வந்தேன். கடந்த நாட்களில் குடும்பத்தில் போராட்டமான சூழல் ஏற்பட்டது. என் மூத்த மகன் சாமுவேல் 7 வருடமாக ஒரு கம்பெனியில் வேலை செய்து வந்தான். அந்த கம்பெனியில் வேலை செய்ய

மனதில்லாமல் இருந்தான். ஐயா வீட்டிற்கு வந்து ஜெபித்தார்கள். மகன் மீண்டும் அந்த கம்பெனியிலே வேலை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். மேலும் என் சகோதரி மகனுக்கு கடந்த 8 வருடமாக திருமண காரியம் தடைபட்டுக்கொண்டிருந்தது. ஐயா என் சகோதரி வீட்டுக்கு வந்து ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதம் செய்து, திருமணம் கடக்க கிருபை செய்தார். மேலும் இந்நாட்களில் ஒரு பெண் குழந்தையையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். அற்புதங்களின் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## தடையை மாற்றின தேவன்

**சகோதரி. சரஸ்வதி,** சென்னை

நான் 2017 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் இந்த சபைக்கு வந்தேன். அப்பொழுது என் மகன் N.ராகுல், XII, CBSEயில் படித்துக்கொண்டிருந்தான். ஐயா ஜெபித்துவிட்டு அவன் அரசுதேர்வு எழுத தடை உள்ளது. நன்கு ஜெபி என்று சொன்னார்கள். நானும் ஜெபித்தேன். பொருத்தனை காணிக்கை அன்றே செலுத்தினேன். தேவன் அற்புதம் செய்தார். மார்ச் மாதம் அரசு பொதுத்தேர்வில் வேதியியல் தேர்வுக்கு முந்தின நாள் மகனின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. தேர்வு எழுதுவதற்கான தடையை கர்த்தர் மாற்றி, தேர்வு நன்கு எழுத கிருபை செய்தார். 500க்கு 470 மதிப்பெண் பெற கிருபை செய்தார். திருச்சியில் அரசு மருத்துவ கல்லூரியில் இடம் கிடைக்க செய்தார். அதிசயம் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## அற்புதம் சுகம் தந்த தேவன்



**சகோதரி. மரகதம்,** சென்னை-13

எனக்கு கர்ப்பபையை 12 செமீ அளவிற்கு கட்டி இருக்கிறது. ஆப்ரேசன் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். Scan பண்ணினேன். ரிப்போர்டில் கேன்சர் கட்டி என்றார்கள். ரிப்போர்டை எடுத்துக்கொண்டு ஐயாவிடம் ஜெபிக்க வந்தேன். ஐயா ஜெபித்துவிட்டு இது ஒன்றும் இல்லை. ஆப்பரேஷன் வேண்டாம் என்றார்கள். மறுபடியும் அண்ணாநகரில் Scan பண்ணினேன். இது வெறும் நீர்க்கட்டி என்றார்கள். தேவனுக்கே மகிமை. வயிறுவீக்கம் குறைந்தது. இப்பொழுது சுகமாக இருக்கிறேன். அற்புதம் சுகம் தந்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## சுகம் கொடுத்த தேவன்

**சகோதரி. பொம்மி,** அன்னை சத்யா நகர்

எனது அக்கா மகனுக்கு சரீரத்தில் பெலவீனம் இருந்தது. அடிக்கடி வலிப்பு வந்துவிடும். இரண்டு பஸ் மாறி பள்ளிக்கு போக வேண்டும். எந்த நேரமானாலும் வலிப்பு வந்து விடும். ஐயாவிடம் ஜெபித்தோம். "ஒரு செத்த ஆவியின் கிரியை உபவாசமிருந்து ஜெபி" என சொன்னார்கள். நாங்களும் ஜெபித்தோம். ஆண்டவரின் பெரிதான கிருபையினால், ஐயாவின் தொடர் ஜெபத்தினாலும் மகன் 12வது வகுப்பை முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி



# யார் பாக்கியவான்?

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே உங்களுக்குள் ஒவ்வொருமாதமும் பகிர்ந்து கொள்ளுதலில் மிகுந்த சந்தோஷம் அடைகிறேன். இந்த மாதம் யார் பாக்கியவான் பாவத்துக்கு செத்து நீதிக்கு பிழைக்கிறவனே பாக்கியவான். பாவம் செய்கிறவன் பாவத்தையே செய்வான். அதை உணர்ந்து விலகும் பொழுது பாக்கியவானாய் காணப்படுவான் அவன் நீதிமானாய் காணப்படுவான்.



சங் 1:1,2 சங்கீதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அதேப்போல் இன்னொரு வசனம் கர்த்தர்பேரில் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் சங் 34:8 சொல்லப்பட்டிருக்கிறது. யோபு பக்தனை பாருங்கள் கடவுளின் பேரில் அன்பு கொண்டு பற்றுதல் கொண்டவராய் காணப்பட்டார். அவர் சொன்ன வார்த்தை என்னைக் கொன்றுபோட்டாலும் பரவாயில்லை அவர் பேரில் நம்பிக்கையாயிருப்பேன். தேவன் அவருக்கு விடுதலை, சந்தோஷம், ஆசீர்வாதம், வெற்றியை கொடுத்தவர் யோபு 13:15, 23:10, 42:10,17 இரட்டிப்பான ஆசீர்வாதத்தை கொடுத்தார்.

கர்த்தரின் பேரில் நம்பிக்கை வைத்து இருப்பவன் பாக்கியவான் சங் 34:8 அவனுடைய இருதயத்தில் வஞ்சனையான வார்த்தைகள் வராது. பிறரை கெடுக்கவேண்டும் என்ற எண்ணங்களோடு தோன்றுபவர்கள் பலர். மனுஷன் இன்று வேஷமாகவே திரிகிறான். விருதாவாகவே சஞ்சரிக்கிறான். நியாயத்தை மேற்கொள்ளுகிறவனும் எக்காலத்திலும் நீதியை செய்கிறவர்களும் பாக்கியவான்களாய் காணப்படுவார்கள் சங் 106:3. சிலர் தேவன் பேரில் பற்றுதலாக் இருப்பதாக பேசுவார்கள். ஆனால் அவர்களுக்குள் வைராக்கியம், பொறாமை காணப்படும். அவர்களை விட மற்றவர்கள் முன்னேற கூடாது என்பது அவர்கள் நோக்கம். அவர்கள் பாக்கியவான்களாய் இருக்கமாட்டார்கள்.

மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களை பகைத்து, உங்களை புறம்பாக்கி

உங்களை நிந்தித்து உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாய் இருப்பீர்கள் லூக்கா 6:22,23

பெத்தானியா ஊர் மார்த்தாள், மரியாளின் நம்பிக்கை, விசுவாசம் எல்லாம் ஒழிந்தது. இயேசுவை சிநேகிக்கிறவன் (லாசரு) வியாதி முற்றி மரித்துபோனான். இயேசுவுக்கு சொல்லி அனுப்பியும் அவர் 4 நாளைக்கு பின்பு அங்கு வந்தார். எல்லாரும் மிகுந்த துக்கத்தோடு அழுதுகொண்டிருந்தார்கள். மரித்துபோன லாசருவை 4 நாளான லாசருவுக்கு இனி மனிதரால் ஒன்றும் செய்ய முடியாது என்று கண்ணீர் விட்டு அழுதனர். நீ விசுவாசத்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்றார். இயேசு லாசருவின் கல்லறைக்குச் சென்று லாசருவே வெளியே வா என்று உயிர்ப்பித்தார். அவரை நம்புகிறவர்கள் பாக்கியவான் யோவான் 11:1-45 அவரை நம்புகிற பிள்ளைகள் வெட்கப்பட்டு போவதில்லை.



இயேசுவின் சீடர்கள் இயேசுவின் அழைப்பை மறந்து பின் மாற்றமாய்ப்போன சீஷர்கள் இராமுழுதும் பிரயாணப்பட்டு கடலுக்குச் சென்று ஒரு மீனும் பிடிக்கவில்லை. அவர்கள் பிரயாணப்பட்டு ரொம்ப சோர்ந்து போனார்கள். மனிதனுடைய பிரயாசம் எல்லாம் வீண் என்று நம்பிக்கை இழந்தார்கள். தேவன் சீடர்களை தேடி நடுககடலுக்குள் சென்றார். சீஷர்கள் அவரைக் கண்டு பயந்துபோனார்கள். பயப்படவேண்டாம் என்று சீஷர்களுக்கு சொன்னார். இயேசு வலப்புறம் வலையை வீசுங்கள் என்று சொன்னார். வலை கிழிந்து போகும் மட்டும் பெரிய மீன்கள் கிடைத்தது. மாபெரும் அற்புதம் நடந்தது. அவர்கள் குளிரை கரி நெருப்பினால் அனலாக்கினார். பொரித்த மீனையும் கொடுத்தார். அவர்களை பார்த்து பிள்ளைகளே என அழைத்தார். அவர்களோடு அன்பாக பேசினார். இயேசுவின் மேல் முழு நம்பிக்கையும், விசுவாசமும் அவர்களுக்கு வந்தது. அவரை நம்புகிறவ யாவரும் பாக்கியவான்கள். ஆகையால் நாம் எப்பொழுது தேவனோடு சஞ்சரிக்கிறவர்களாய் காணப்படவேண்டும்.

யோவான் 21:1-14 1. நீதிமானின் பிள்ளைகள் பாக்கியவான்களாயிருப்பார்கள். அவர்கள் தரித்தரனுக்கு இறங்குகிறவர்களாய் இருப்பார்கள். அவன் எப்பொழுதும் பயந்து காணப்படுவான். கர்த்தருடைய வழிகளை காத்து நடக்கிறவர்களாய் நடப்பார்கள். அவர்கள் தேவனுக்கு பயந்து நடப்பார்கள். இவையாவும் நீதிமொழிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருக்குப் பயந்து அவருடைய பத்து கற்பனைகளுக்கு பயந்து அவருக்குள் பிரியமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான் சங்கீதம் 112:1.

கர்த்தருக்கு பயந்த பிள்ளைகள் ஆவியின் கனிகளுடன் காணப்படுகிறவன் பாக்கியவான்.

இன்றைக்கு உலகம் எங்கும் பார்க்கும்போது ஆவியின் வரம்பெற்று வல்லமையாய் பிரகாசித்த பல ஊழியர்கள் விழுந்து கிடக்கிறார்கள். ஆனால் கனியுள்ளவர்கள் விழாமல் நின்று கொண்டு இருக்கிறார்கள். அப்படியென்றால் வரத்தின்மேல் தவறா? வரங்களை கொடுத்த ஆவியானவரை சாட்டுவதா? ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆவியின் வரமும் வேண்டும் கனிகளும் வேண்டும். இந்த இரண்டும் இணைந்திருந்தால் நீங்கள் பாக்கியவான்கள். அப்பொழுது ஆவியானவர் உங்களுக்கு வரங்களையும் தர விரும்புகிறார். வரங்களைப் பெற்று ஆண்டவருக்காக எழும்பி பிரகாசிக்க வேண்டும் கனிகளை பெற்று கர்த்தரை மகிமைப் படுத்தவேண்டும். சிறுமைப்பட்டவர்களுக்கு இரங்க வேண்டும். அவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள். சிலர் ஏழைகளுக்கு இரங்கமாட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள். இதே பணக்காரர்களை கண்டால் அவர்களுக்கு காபி என்ன எல்லாவிதமான பொருட்களை கொடுத்து உபசரிப்பார்கள். ஆனால் தேவன் அதை அங்கிகரிக்கமாட்டார்.

நீங்கள் தேவனோடு இணையும்பொழுது ஏழைகளுக்கு இரங்கவேண்டும். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவர்கள் தான் பாக்கியவான்களாய் இருப்பார்கள்.

நீ நீதிமானாய் இருந்தாயானால் நீ அசைக்கப்படுவதில்லை. அவர்கள் வெட்கப்படுவதில்லை. அவர்கள் வீட்டில் மனமகிழ்ச்சி காணப்படும். சந்தோஷம் காணப்படும். ஆசீர்வாதமும் காணப்படும். எந்த சோர்வு, வியாதி, பெலவீனம் வந்தாலும் அவர் பார்த்துக்கொள்வார் என்று நீ விசுவாசிக்கும்பொழுது நீ அசையாத நங்கூரம் போலிருப்பாய். வியாதியை சுகமாக்குவார். அப்பொழுது தான் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால், இந்த புத்தகத்தில் வருகிற தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் வெளி 1:2. நாம் நம்முடைய வஸ்திரங்களை பாதுகாத்து கொள்ளுகிறவன் பாக்கியவான் வெளி 16:15 ஊழியக்காரர் ஆண்டவர் வரும்பொழுது விழித்திருந்து ஜெபிக்கிறவர்களாக காணப்படவேண்டும். அவர்கள் பேர் கிறிஸ்தவர்களாகவும் நேரத்திற்கு தகுந்தார் போல் பேசக்கூடாது. உண்மையாக நடந்து, எந்த வேளையும் தேவன் என்ன நடத்துவார் என்று நம்பிக்கையோடு இருக்கிறவன் பாக்கியவான்.

நாம் பாக்கியவானாய் இருந்தால் மட்டும் போதாது. விசுவாசமும் தேவை நீதிமானாய் இருத்தல் வேண்டும். இந்த உலகத்தில் நீதிமான என்று சொல்லக்கூடிய ஒருவனும் இல்லை ரோமர் 3:10,23.

இயேசு கிறிஸ்து மட்டும் தான் நீதிமானாய் காணப்படுகிறார்.

1. பரிசுத்த ஆவி நம்மை நீதிமானாக்கும்
2. கிருபையினால் நீதிமானாக்கப்படுகிறோம்.
3. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம்.
4. தன்னைத் தாழ்த்துகிறவனும் கீழ்படிகிறவனும் நீதிமானாக்கப்படுகிறான்.
5. நீதிமான் கோபாக்கினைக்கு நீங்கலாக்கி தாழ்மையை கண்டு கொள்கிறான்.
6. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாய் இருக்கும் சங் 34:15
7. நீதிமானை எப்பொழுதும் தாங்குகிறார். நீதிமான் துன்மார்க்கனுடைய கண்களுக்கு விலக்கி வாழ்கிறான். துன்மார்க்கமான கைகளுக்கு நீட்டப்படாது. அவர்களுக்கு விசேஷித்த ஞானம் அவர்களுக்கு உண்டு.
8. யோபு உத்தமனும் சன்மார்க்கனும் நீதிமானுமாய் காணப்பட்டான். அவன் ஆண்டவரை குறை சொல்லவில்லை. எவ்வளவோ, பாடுகளை சகித்தவனாய் காணப்பட்டான். பிறருக்காக ஜெபித்தான். தன்னுடைய பாடுகளை நினைத்து இரட்டத்தனையாய் காணப்பட்டான்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான பிள்ளைகளே கர்த்தருக்கு பிரியமாகவும், நீதிமானாகவும் விசுவாசமாகவும் நாம் இருக்கும்பொழுது பாக்கியவான்களாகவும் காணப்படுவோம். இந்தக் கடைசி காலத்தில் கர்த்தருடைய வார்த்தை கேட்டு நாம் மகிமைப்பட்டவர்களாய் காணப்படும். கர்த்தர் நம்மை பிறர் மத்தியில் மகமையாக வைத்து ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளைகளாய் காணப்படுவார்கள். அருமையான பிள்ளைகளே கர்த்தரை பார்ப்போம். மனுஷனை பார்க்கவேண்டாம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவன் தாமே பெலன் தருவாராக!.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள்
அருமை சகோதரி. மேபல் இஸ்ரேவேல்

# தியாகச் செம்மல் – *ஹட்சன் டெய்லர்*

(1832-1905)



**ஆரம்ப பருவம் :**

இங்கிலாந்து தேசத்தில் 1832 ஆம் ஆண்டு மே 21-ஆம் நாள் ஹட்சன் டெய்லர் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் சிறந்த கிறிஸ்தவர்கள். இளமையில் மெலிவான தோற்றமும் பெலவீன சரீரமுடைய இவர், 14 வயது வரை வீட்டிலேயே தங்கி பயின்றார். நான்கு வயதிலேயே எபிரெய மொழியின் எழுத்துக்களைத் தந்தை போதித்தார். சிறு வயதிலேயே உலகின் அருட்பணி தேவையை உணர்ந்தார்.

**மனம்திரும்புதலும் அழைப்பும்:-**

சிறு வயதிலேயே ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்க்கப்பட்ட ஹட்சன் தனது 14 வயது வயதில், ஒரு நாள் ஞாயிறு மாலையில் கைப்பிரதி ஒன்றை வாசித்தார். "எல்லாம் முடிந்தது" என்பது அதன் தலைப்பாகும். அதை வாசித்த போது பாவ உணர்வு அடைந்து இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அந்தச் சமயத்தில் வெளியூர் சென்று திரும்பிய தன் தாயிடம் தான் பெற்ற அனுபவத்தைக் கூறிய போது, எனக்கு இந்த நிகழ்ச்சி முன்பே தெரியும் என்றாராம். எப்படி என்று கேட்ட போது நான் 70, 80 மைல்களுக்கு அப்பால் இருந்தாலும், உன் இரட்சிப்புக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். மட்டுமல்ல, தன் மகனைக் கர்த்தர் இரட்சித்ததற்காக நன்றி செலுத்தி ஸ்தோத்திரம் செய்தாராம். என்ன ஆச்சரியம் பாருங்கள்! அவர் தூரத்துக்கும் சமீபத்துக்கும் தேவன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறல்லவா?



ஒரு நாள் ஹட்சன் தன் ஜெப நேரத்தில் தேவனே! வருங்காலத்தில் என்னை உம்முடைய ஊழியத்துக்காக பயன்படுத்தவேண்டும். என்ன விதமான பணியை எங்கு செய்ய வேண்டுமென்று எனக்குத் திட்டமாய் தெரிவியும். நீர் எனக்குச் சொல்லும் வரை இந்த அறையிலிருந்து வெளியேற மாட்டேன் என்று மன்றாடி ஜெபித்தார். எனக்காக சீன தேசத்திற்குப் போ என்று தேவன் தன்னோடு திட்டமாய் பேசுவதைக் கேட்டார்.

**மிஷனெரி பணிக்கென்று ஆயத்தப்படுதல் :—**

தேவனுடைய குரலைக் கேட்ட பின்பு அந்த அழைப்பில் ஒரு போதும் சந்தேகப்பட்டதில்லை. சீன தேசத்தில் இறைப்பணியைச் செய்யத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டார். சீன தேசத்தைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து அறிந்து கொள்ளத் தொடங்கினார். "தேவனே என்னை முழுவதுமாய் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பீரானால் உமக்காக எதையும் சாதிக்க முடியும். உமது சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, நீர் காட்டும் எதையும் நான் செய்வேன்" என்றார். தேவனும் அதற்கு ஏற்ற பதிலைக் கொடுத்தார்.

லூக்கா எழுதின நற்செய்தி நூலை சீன மொழியில் கற்று புலமை பெற்றார். ஆசிரியர் இல்லாமலேயே சீன மொழியைக் கற்றுக்கொண்டார். கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்தார். இலத்தீன், கிரேக்கம் மொழிகளையும், இறைநூல், மருத்துவம் ஆகியவற்றையும் கற்றுத்

தேர்ச்சி பெற்றார். பிற்காலத்தில் தான் செய்யப் போகும் எல்லாப் பணிகளுக்காகவும் தன்னை ஆயத்தப்படுத்தி, உலகின் மற்றப் பாகங்களில் பணியாற்றும் மிஷனெரி இயக்கங்களோடு தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டார். "சீனர்களின் ஐக்கிய அமைப்பு" பிற்காலத்தில் சீன நாட்டிற்கு நற்செய்தி அறிவிக்கும் கழகமாக மாறியது. 19ஆம் வயதில் மருத்துவ மேற்படிப்புக்காக இலண்டன் நகரம் போய்ச சேர்ந்தார். ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகக் கட்டுப்பாடான, கடினமான வாழ்க்கையை மேற்கொண்டார். தன் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்.

மெலிவான தோற்றமும். பிறரை விட்டு ஒதுங்கி வாழும் பண்பும் கொண்டவர். இவர் எப்படி மிஷனெரியாக மாற முடியும் என்று அனைவரும் நினைத்தனர். என் நினைவு உன் நினைவு அல்ல என்ற வசனத்தின்படி தேவன் பயன்படுத்த ஆரம்பித்தார். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலேஎல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுன்டு (பிலி 4:13) என்ற வசனத்தின்படி பெலவீனமான ஹட்சனைத் தேவன் தம்முடைய மகிமைக்காகப் பயன்படுத்த ஆரம்பித்தார்.



**சீன நாட்டில் பிரவேசித்தல் :-**

1853 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஹட்சன் டெய்லர் சீனாவிற்கு பிரயாணம் செய்ய கப்பல் ஏறினார். சீன நாட்டிற்கு "நற்செய்தி கழகம்" என்ற ஸ்தாபனத்தின் வாயலாக அனுப்பப்பட்டார். மூன்று நண்பர்கள் வழியனுப்ப, ஐந்தரை மாதங்கள் பிரயாணத்திற்கு பின்பு சென்றடைந்தார். சீன நாட்டில் அவர் கரையிறங்கிய போது அவரை வரவேற்க ஒருவரும் இல்லை. ஆனாலும், அவருக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டின் கரையில் அவர் காலடி எடுத்து வைத்த போது உள்ளம் பூரித்தது. சீனாவிலுள்ள ஷாங்காய் நகரம் புரட்சியாளர்களின் கையில் இருந்தது. உணவுப் பொருட்களின் விலை அதிகமாக இருந்தாலும் கடவுள் பேரில் அவருக்கு இருந்த விசுவாசமே அவரைத் தாங்கி பிடித்தது. தன்னிடம் உள்ள மிகக் குறைந்த சீன மொழி அறிவைக் கொண்டு மக்களை சந்தித்து கைப்பிரதிகளைக் கொடுக்க ஆரம்பித்தார். சில புதிய சீன வார்த்தைகளையும் கற்றுக்கொண்டார். மிஷனெரிகள் செல்லா இடங்களுக்குச் சென்றுஊழியம் செய்தார். ஒரு முறை ஊழியத்தின் போது ஒரு உயரமான பலசாலி மனிதனிடம் சிக்கிக்கொண்டார். குடிவெறியில் இருந்த அவன் ஹட்சனின் தலைமுடியை பிடித்து இழுத்து முரட்டுத்தனமாக நடத்தினான். மயங்கி விழும் நிலைக்கு வந்தாலும் தன்னை நிதானித்து எழுந்தார். இவர் மேல் கோபமுற்ற சிலர் இவரை ஒரு அரசாங்க அலுவலரிடம் இழுத்துச் சென்றனர். அந்த அதிகாரி அவரை மிகுந்த மரியாதையையாய் நடத்தி ஒரு புதிய ஏற்பாட்டை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

சீன நாட்டில் எண்ணிறந்த மக்கள் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தப்படாத நிலையில் இருந்தனர். பவுல் அடியாரின் முன் மாதிரியின்படி "சிலரையாவது இரட்சிக்கும்படியாக நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன்" என்றபடி இவரும் சீன உடை உடுத்தி சீன வாழ்க்கை முறையை மேற்கொண்டார். இவருடைய உடையை மற்ற மிஷனெரிகளுக்கு பிடிக்கவில்லை என்றாலும் சீன முறைகளை அனுசரிப்பது சிறந்தது என்று அறிந்த ஹட்சன் சில மாதங்களில் மனம் திரும்பிய முதல் ஆத்துமாவை ஆதாயப்படுத்தி விட்டார்.

**பிரச்சனைகளை சமாளித்த ஹட்சன் :-**



டெய்லர் தனது பணிகளில் அடிக்கடி சோர்வடைய சோதிக்கப்பட்டார். அவருக்கு எதிர்காலம் இருளாகவே இருந்தது. "என் பாதை சமமாக காணப்பட்டாலும் ஓரடி மாத்திரம் நடத்தப்பட்டேன் நான் இன்னும் கடவுளுடைய வெளிப்படுத்தலுக்கு காத்திருக்கவும் நம்பவும் வேண்டும் எல்லாம் நன்மையாகவே நடக்கும்" என்று எழுதியுள்ளார். அவரை அனுப்பி வைத்த மிஷனெரி இயக்கம் அக்கரை இல்லாமல் இருந்துவிட்டது. பண உதவிகள் கிடைக்கப்படவில்லை. எதிர்பாராத சீன புரட்சி ஏற்பட்டால் ஹட்சனுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதை அறிந்த பிரிட்டிஷ் அரசு, அவரை உள்நாட்டிற்குள் செல்லாதபடி தடுதத்து. ஆனால், ஹட்சனோ தன்னை பாதுகாப்பதை விட சுவிசேஷம் அறிவிப்பதையே பிரதானமாகக் கொண்டார். இவருக்கு உறுதுணையாக இருந்த நண்பர் வில்லியம் பர்ணஸ் புரட்சிக்காரரால் சிறைபிடிக்கப்ட்டு கொல்லப்பட்டது இவருக்கு பேரிழப்பாக அமைந்தது.

நிங்போ என்ற துறைமுக நகரில் தன் பணியை ஆரம்பிக்க முடிவு செய்தார். செல்லும் வழியில் அவருடைய வேலைக்காரன் எல்லா உடைமைகளையும் திருடிக் கொண்டு அவரைத் தனியே விட்டு ஓடிப்போனான். ஆகாரக் குறைவினாலும், தூக்கமின்மையாலும் பாதை ஓரத்தில் மயங்கி விழுந்து விட்டார். உடைமைகளை இழந்த தவிப்பு அவரிடம் இல்லை. தன் எண்ணமெல்லாம் சீனர்களைப் பற்றியதாகவே இருந்தது. நிங்போ மொழியில் இருந்த புதிய ஏற்பாட்டைத் திருத்தியமைத்தார். அச்சமயத்தில் மரியா டையர் என்ற இளம் பெண்ணையும் மணந்து கொண்டார். நீண்ட நேரம் படிப்பு, போதனை செய்வது, நீண்ட நேரம் பிரயாணம் முதலியவைகளால் டெய்லர் அவர்களின் சுகம் பாதிப்படைந்தது. அதனால் ஏழு ஆண்டுகளின் இடைவிடாத சேவைக்குப் பின்பு ஓய்வு எடுப்பதற்காக இங்கிலாந்து தேசத்திற்குத் திரும்பச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

**சீன உள்நாட்டு மிஷின் ஸ்தாபனம் :–**

இலண்டன் மாநகரில் மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து படித்தார். சீன தேச படம் ஒன்றை சுவற்றில் தொங்க விட்டிருந்தார். பதினொரு தனித்தனி பிரதேசங்களையும், முப்பத்தெட்டு கோடி மக்களையும் அதில் சித்திரித்திருந்தது. பணிபுரிய மிஷனெரிகளுக்காகச் ஜெபித்து வந்தார். ஒரு சிறு தொகையை விசுவாசத்தினாலே வங்கியில் முதலீடு செய்தார். சிறிய தொகையோடு ஏராளமான கடவுளின் வாக்குத்தத்தங்களும் அன்று மிஷன் ஸ்தாபனத்திற்காக முதலீடு செய்யப்பட்டது என்று ஹட்சன் சொன்னார்.

ஹட்சன் ஜெபத்தை கேட்ட தேவன் பதினொரு மாதங்களுக்கு பின்னர் 14 மிஷெனொரிகளோடு சீன நாட்டிற்கு பயணமானார். அனைவரும் தேவபணிக்கு தங்களை ஒப்படைத்தவர்கள். எங்கே பணி செய்யப்போகிறோம் என்று அறியாத நிலையில் சென்றனர். ஹட்சன் குழுவினர் ஆற்றிய திருமறை உரையாடல்கள் மூலமாய் 20 கப்பல் சிப்பந்திகள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். "தன் வீட்டிலும் சுய நாட்டிலும் பயன்படாதிருக்கிற ஓர் ஆள் அயல்நாட்டிலும் கிறிஸ்துவின் சேவையில் பயனுள்ளவராய் இருக்கமாட்டார்" என்று அடிக்கடி ஹட்சன் கூறுவார்.

**சீன நாட்டை மறுமுறை வந்தடைதல் :-**

ஷாங்காய் துறைமுகத்தில் வந்து சேர்ந்த அனைத்து மிஷெனரிகளும் உயிருக்குப்

பயப்படாமல் உள்நாட்டிற்குள் போகத் தீர்மானித்தனர். டெய்லர் அவர்களுக்கு தலைமை ஏற்று நடத்திச் சென்றார். பல குறைகள் இருந்தாலும் கர்த்தரே அவர்களுடைய தேவை எல்லாவற்றையும் சந்தித்தார். "ஒவ்வொரு பிரச்சனையையும் விசுவாசத்தினால் மேற்கொண்டு வெற்றி அடைவதே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, பலமும் ஊட்டமும் கொடுக்கக்கூடிய வல்லமையாக மாறுகிறது" என்றார் ஹட்சன்.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னர், சீன உள்நாட்டு மிஷனெரி ஸ்தாபனம் மிகப்பெரிய அளவில் வளர்ந்தது. 225 மிஷனெரிகளும் 59 ஆலயங்களும் 1700 விசுவாசிகளும் கொண்ட ஸ்தாபனமாய் விளங்கியது. பயிற்சி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. பல இழப்புகள் ஏற்பட்டன. பன்னிரண்டரை ஆண்டுகள் தனக்கு உதவியாக இருந்த தன் மனைவியையும் தன் மூன்று குழந்தைகளையும் இழந்தார். அப்போதும் "நான் தனித்துவிடப்பட்டவன் அல்ல முன்பைக் காட்டிலும் கர்த்தர் அதிக நெருக்கமாக உள்ளார்" என்றார். திருப்பணிகளுக்காக பணம் தாருங்கள் என்று யாரிடமும் கேட்டதில்லை. காணிக்கை எடுக்க ஒரு போதும் அனுமதித்ததே இல்லை. கடவுளுக்கு மகிமை கொண்டு வருவதே அவருக்கு நோக்கமாக இருந்தது.

**சீன தேசமே எப்போதும் அவர் நினைவு:-**



ஹட்சன் பலமுறை இங்கிலாந்திற்கு வந்த போதிலும் அவர் நினைவெல்லாம் சீன நாட்டை பற்றியே இருந்தது. சீன தேசத்து ஒவ்வொரு பட்டணத்தையும் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்த தீர்மானித்தார். சுகவீன நாட்கள், கடவுள் அவருக்குத் தெளிவான வெளிப்பாடுகளைத் தந்த நாட்களாகும். பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். சீன தேசத்தின் தேவைகளை, எடுத்து சொன்னாரேயன்றி, பண உதவி ஒரு போதும் கேட்டதில்லை. 1905 ஆம் ஆண்டு ஹட்சன் தனது சீனப் பயணத்தை திரும்பவும் மேற்கொண்டார். இது அவருக்கு கடைசி பயணமாக அமைந்தது. சீன நாட்டில் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் சாங்ஷா பட்டணத்திற்குச் செல்ல விரும்பினார். அப்பட்டணம் அவருடைய திருப்பணித் திட்டத்தில் இருந்து கடைசி மாநிலத்தின் தலைநகரமாகும். சாங்ஷா நகரில் அவர் வந்து இறங்கியதுமே, கடவுளோடு ஐக்கியப்படும்படியாகப் பரலோகம் சென்றடைந்தார்.

ஹட்சன் டெய்லர் உலக ஐசுவரியம் ஒன்றும் இல்லாதவர். வறுமையில் வாழ்ந்தவர். வாழ்க்கை வசதிகளை உதறித்தள்ளி அநேகரை ஐசுவரியவான்களாக்கத் தன்னை ஏழ்மையாக்கினார். ஜீவனுள்ள தேவனை முழுவதுமாய் நம்பி சார்ந்ததே இவர் வாழ்க்கையின் இரகசியம். கைக்கூடாது, நடக்காத, ஒருவரும் செய்யமுடியாது என்று மனிதன் நினைப்பவைகளைப் பார்த்து, விசுவாசம் என்னும் பற்றுறுதி சிரிக்கும். கீழ்ப்படிதலும், கடவுளுடைய சித்தத்தை செய்தலும், கேள்விகளைக் கேட்டு தாமதிக்கும் மனப்பான்மையைக் கொண்டு வராது என்னும் பொன்மொழிகளை ஹட்சன் அடிக்கடிக் கூறுவார். விசுவாசமும், கீழ்படிதலும் கர்த்தருடைய திருப்பணியாளர்களின் வல்ல செயல்களின் இரகசியமாகும். நீயும் கர்த்தருடைய பணியில் விசுவாசத்தோடு கீழ்ப்படிவாயா?

கிறிஸ்துவுக்குள் அன்பான
சகோதரி சுந்தரி




# பகிர்ந்து வாழ்தல்

*Hello* குட்டீஸ்! எப்படி இருக்கீங்க? வெயிலின் கொடுமை அதிகமாக இருக்குதா? விடுமுறை முடிந்து பள்ளி ஆரம்பிக்கும் காலம் நெருங்கிவிட்டது. புதுப்பள்ளி புது வகுப்புக்கு செல்ல ஆயத்தமாகிவிட்டீர்களா? நண்பர்களைத் திரும்பவுமாக பார்க்கச் செல்வதில் மிகுந்த ஆர்வமாக இருப்பீங்கன்னு எனக்குத் தெரியும். VBS-ல் படித்த எல்லா பாடல்களையும் கைதகளையும் மறந்து விடாதீங்க. பகிர்ந்து வாழ்தல் என்றால் என்ன என்று கேட்கிற மாதிரி இருக்கு. இதோ, சொல்கிறேன் அதாவது தன்னிடம் இருப்பதை தான் மட்டும் அனுபவிக்காமல் பிறருக்கு கொடுத்து வாழ்தல் என்பதாகும். இயேசு தன்னை சிலுவையில் ஒப்புக்கொடுத்த செயல் தியாகம். நாம் அப்படிச் செய்யாவிட்டாலும் நம்மிடம் இருப்பதை இல்லாதவர்களுக்கும் கொடுத்து வாழலாமே!

ஒரு காட்டில் விலங்குகளெல்லாம் மிகவும் சந்தோஷமாக தங்களுக்கு இருப்பதைப் பிறருக்கும் கொடுத்து வாழ்ந்து வந்ததாம். அந்தக் காட்டிற்கு ஒரு குரங்கு வேறு ஒரு காட்டிலிருந்து வந்ததாம். புதிதாக, வந்த குரங்கிடம் அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றி எடுத்துக் கூறியதாம். அதாவது, நாங்கள் ஒருவருக்கொருவர் பங்கு போட்டு பிறருக்கும் கொடுத்து வாழ்வோம் என்றதாம். அதைக் கேட்ட குரங்கு தன்னுடைய காட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொன்னதாம். அதாவது, எங்களுடைய காட்டில் ஒரு குரங்கு குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தார்கள். ஒரு நாள் தந்தை குரங்குக்கு ஒரு மரத்திலிருந்து 5 பழங்கள் கிடைத்தன. அந்த 5 குரங்குகளும் அந்தப் பழங்களை ஆளுக்கு ஒன்றாக சாப்பிட ஆரம்பித்த போது, அந்தப் பக்கமாக வயதான குரங்கு ஒன்று வந்தது. அந்த வயதான குரங்கு மற்ற ஐந்து குரங்குகளைப் பார்த்து, எனக்குப் பசியாக இருக்குது எனக்கும் கொஞ்சம் கொடுங்கள் என்றதாம். அதைப் பார்த்த ஐந்து குரங்குகளுக்கும் வயதான குரங்கின் மேல் இரக்கம் வந்தது. அந்த ஐந்து குரங்குகளும் ஒன்றாகச் சேர்ந்து, அண்ணா! அண்ணா! நீயே இந்த ஐந்து பழங்களையும் சாப்பிடு என்றதாம். அதற்கு அந்த வயதான



குரங்கு இல்லை பிள்ளைகளே, எனக்கு ஒன்று போதும். மீதி நான்கினை நீங்களே சாப்பிடுங்கள் என்றதாம். அதைக் கேட்ட ஐந்து குரங்குகளும் அண்ணா நீ மிகவும் வயதானவனாக இருக்கிறாய். உன்னால் இரை கூட தேட முடியாது. ஆனால், நாங்கள் அப்படியல்ல, எங்கள் உடம்பில் பலம் இருக்கிறது. நாங்கள் எங்களுக்குரிய இரையைத் தேடிக்கொள்வோம் என்று கூறி பழங்களைக் கொடுத்து விட்டதாம். அந்த வயதான குரங்கும் மகிழ்ச்சியோடு சென்றாதாம்.



பிள்ளைகளே! நமக்கு நமக்கு என்று வைத்துக் கொள்ளாமல் கொடுத்த அந்தக் குரங்குகளுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. திடீரென்று வீசிய காற்றினால் மரத்தின் உச்சியிலிருந்த பழங்களெல்லாம் உதிர்ந்தன. ஐந்து குரங்குகளும் மகிழ்ந்து உண்டன. என்ன தம்பி தங்கைகளே! நீங்களும் பிறருக்குக் கொடுத்து வாழ்ந்தால் கர்த்தர் உங்கள் தேவைகளைச் சந்திப்பார். செய்வீங்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

மனப்பாட வசனம்:-

**பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன் – ரோமர் 12:8**

கிறிஸ்துவுக்குள் அன்பான
சகோதரி *சாந்தி டென்சிங்*

---




# கடந்த மாத வேத வினாக்களுக்கான விடைகள்

1. ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் ஏசாயா 4:4
2. திராட்சரசம் பிரசங்கி 10:19
3. ஐசுவரியமும், மகிமையும், ஜீவனுமாய் நீதி 22:4
4. முதியோர்கள் சங் 119:100
5. லீபனோன், கேதுருக்கள் உன்னதப்பாட்டு 5:15
6. சாந்தகுணமுள்ளவர்கள் சங் 147:6
7. கருணைக்கண்ணன் நீதி 22:9
8. சங் 132 : 1-5
9. ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத்தரும் பிரசங்கி 7:12
10. தேசத்தின் நன்மை ஏசாயா 1:19

# வேத வாசிப்பு பகுதி

## ஜூன் மாத வேதப்பகுதி மற்றும் வேத வினாக்கள

### தேதியும் அதிகாரங்களும்

| நாள் | வாசிக்க வேண்டிய வேதப்பகுதி | நாள் | வாசிக்க வேண்டிய வேதப்பகுதி |
|---|---|---|---|
| 1. | ஏசாயா 10-12 வரை | 16. | ஏசாயா 55-57 வரை |
| 2. | ஏசாயா 13-15 வரை | 17. | ஏசாயா 58-60 வரை |
| 3. | ஏசாயா 16-18 வரை | 18 | ஏசாயா 61-63 வரை |
| 4. | ஏசாயா 19-21 வரை | 19. | ஏசாயா 64-66 வரை |
| 5. | ஏசாயா 22-24 வரை | 20. | எரேமியா 1-3 வரை |
| 6. | ஏசாயா 25-27 வரை | 21. | எரேமியா 4-7 வரை |
| 7. | ஏசாயா 28-30 வரை | 22. | எரேமியா 8-11 வரை |
| 8. | ஏசாயா 31-33 வரை | 23. | எரேமியா 12-16 வரை |
| 9. | ஏசாயா 34-36 வரை | 24. | எரேமியா 17-19 வரை |
| 10. | ஏசாயா 37-39 வரை | 25. | எரேமியா 20-22 வரை |
| 11. | ஏசாயா 40-42 வரை | 26. | எரேமியா 23-25 வரை |
| 12. | ஏசாயா 43-45 வரை | 27. | எரேமியா 26-29 வரை |
| 13. | ஏசாயா 46-48 வரை | 28. | எரேமியா 30-32 வரை |
| 14. | ஏசாயா 49-51 வரை | 29. | எரேமியா 33-36 வரை |
| 15. | ஏசாயா 52-54 வரை | 30. | எரேமியா 37-39 வரை |

### வேத வினாக்கள்

1. தன் தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாக இருப்பவன் யார்?
2. என் கோபத்தின் கோல் யார்?
3. எழுபது வருஷங்களின் முடிவிலே கர்த்தர் யாரை சந்திப்பார்?
4. ரேகாபின் குடும்பத்துக்கு இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதம் என்ன?
5. ஏசாயா புஸ்தகத்தில் வாசிக்க வேண்டிய பகுதியில் ஒரே அதிகாரத்தினால் அநேக மிருகங்கள், பட்சிகள், பெயர்கள் வந்துள்ளன. அவற்றை குறிப்பிடுக
6. எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை உடைத்துப்போட்ட தீர்க்கதரிசி யார்?
7. கர்த்தருடைய வார்த்தைகள் அடங்கிய சுருளை சுட்டெரிக்கவேண்டாம் என்று யூதராஜாவாகிய யோயாக்கீமிடம் விண்ணப்பம் பண்ணினவர்கள் யார்?
8. அநியாயமாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவன் எதற்கு சமானமாயிருக்கிறான்?
9. யாருக்கு நீதிமான் கிளையை முளைக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்?
10. இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. எந்த வார்த்தை?

# தொடங்கிடு...
# நிலைத்திடு...
# வென்றிடு...

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான தம்பி, தங்கையரே, உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் அன்பின் வாழ்த்துதல்கள் கடந்த நாட்கள் முழுவதும் நம்மை காத்து வழிநடத்தின ஆண்டவருக்கு நன்றியினை செலுத்துவோமாக. இந்த மற்றொரு புதிய கல்வியாண்டினை காண செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. புதிய ஒரு துவக்கத்தை எதிர்நோக்கி நிற்கும் அனைவருக்கும் கர்த்தர் தாமே உங்களுடனேகூட இருந்து வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக. அன்புடையவர்களே! எல்லோரும் புதிய ஒரு சூழலை எப்படி அனுபவிக்க வேண்டும் என்ற சந்தோஷத்தோடும், இன்னும் பல கலவையான மனநிலையில் இருக்கிறீர்கள் அல்லவா? எதுவாகிலும் சற்று தேவ சமூகத்தில் உங்களை அர்ப்பணித்து தொடங்கிட உங்களை அழைக்கிறேன்.

## தொடங்கிடு:-

அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக எப்படி செய்தார் எபேசியர் 4:15.

கிறிஸ்துவ வாழ்க்கை என்பது ஒவ்வொரு நாளும் நாம் கிறிஸ்துவுக்குள் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, சுத்தகரிக்கப்பட்டு, பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்திருப்பதேயாகும். தினம் தினம் இயேசு கிறிஸ்துவினால் அவருடைய கிருபையினால் புதியதான தொடக்கமாகவும் பரிசுத்தமான துவக்கமாயும் அமைந்திட வேண்டும். இயேசு கிறிஸ்துவினால் துவக்கப்படும் எந்த காரியமும் முடிவில் பூரணமான ஜெயத்தை நிச்சயம் வாய்க்கசெய்யும். இந்த கல்வியாண்டிலும் படிப்பிலும், வேலையிலும் ஆவிக்குரிய வாழ்க்கையிலும், சமூகத்திலும் நீங்கள் செய்யும் எல்லா காரியத்திலும் உள்ள துவக்கம் இயேசு கிறிஸ்துவினால் தொடங்கிட வாழ்த்துக்கள். துவக்கம் என்பது வளர்ச்சியின் முதல் அத்தியாயம் நாம் வளருகிறவர்களாயிருக்கிறோம் புதிய சிந்தனைகள் புதிய முன்னேற்றங்களை காணப்போகிறோம். அறிவியல் சார்ந்து அல்லது சமுகம் சார்ந்த பல முன்னேற்ற பாதை நாம் வளர காத்திருக்கிறோம். இவைகளின் மத்தியில் பிரதானமான வளர்ச்சி என்பது தேவகிருபையில் வளருவதுதான். இத்தகைய கிருபையில் நம் வளர்ச்சியை தொடங்கிட நாம் என்ன செய்யவேண்டும்.

கிருபையில் வளர்வது என்பதென்ன? கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தேவஆவியிலே அவருடன் நெருங்கி அவர் தயவைப்பெற்று வாழ்வதே. கிருபையில் மட்டும் வளர்ந்து அறிவிலே வளராமலிருப்பது கூடாதகாரியம் அவரோடு இசைந்திருப்பதற்கு அவரைப் பற்றிய அறிவிலும் பழக்கமுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே அவருடன் நாம் வளர முடியும். தேவ திட்டங்களை நிதானித்து, சத்தியத்திற்குக் கீழ்படிந்து அவருடைய கிருபையில் வளர அனுதினமும் உங்கள் காரியங்களை தொடங்கிட பிரயாசப்படுங்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் உலகத்தாரிடமிருந்து தேவனாலே பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை மறந்துவிட கூடாது. நம்முடைய எண்ணங்களும், நம்பிக்கையும் நமக்கான தேவதிட்டங்களும் மேலானவைகளை நாம் தேவனுடைய புதிய நாமத்தைப் பெற்றுள்ளோம். கிறிஸ்துவின் சிந்தனையுள்ளவர்களாம் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். நமது துவக்கத்தில் மட்டுமல்ல தேவ ஆவியும் கிருபையும் முடிவுபரியந்தம் வழிநடத்தும். தேவ ஆவியினால் நடத்தப்பட்டு, தொடர்ந்து பயனித்தால் தேவ பிள்ளைகளாயிருப்போம்.

 

எதை செய்தாலும் அதை மனுஷருக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்று மனப்பூர்வமாய் செய்யுங்கள்... எதுவாகிலும் கர்த்தரை சார்ந்தே செய்யுங்கள்... யோசேப்பு தன் சகோதரர்களால் நிராகரிப்பட்டவுடன் அவன் புதுசூழ்நிலை மிகவும் பரிதாபமானது. ஆனால் கர்த்தரை அவன் சார்ந்து கொண்டதினால் காரியம் மாறுதலாய் முடிந்தது. எல்லா தருணங்களிலும் தேவனை முன்வைத்து தொடங்கினான் எல்லாவற்றிலும் ஜெயம் பெற்றான். அடிமை வாழ்க்கை மாரினது அரியனை ஏற்றி கர்த்தர் உயர்த்தி ஜெயம் தந்தார்.

NEW BEGINNING WITH GOD → POSSIBLE THINGS

## நிலைத்திடு:-

நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும் அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்து கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகிவீர்களாக கொலேசேயர் 2:6-7.

சத்தியத்தில் நம்முடைய விசுவாசத்தை நிலைநாட்டுவது மட்டும் அவசியமானதல்ல அவற்றில் நிலைத்திருக்க வேண்டும் என்பதே அவசியம். தேவ வார்த்தைகளை உள்ளபடி ஏற்றுக்கொண்டவர்கள் தான விசுவாசத்தின் மூலமாய் பக்திவைராக்கியம் அடையமுடியும். சத்தியத்தில் வேர்கொண்டு நிலைத்திருக்கமுடியும். நம்முடைய பரமபிதா நாம் வர் வார்த்தைகளின் பேரில் அதிக கவனமுள்ளவர்களாக இருக்கவே விரும்புகிறார். சத்திய வார்த்தைகளை கைக்கொண்டு கீழ்படிந்து நடக்க இன்னும் சமயம் உண்டென்று எண்ணி அசதியாயிராமல் அவருக்கு செவிகொடுத்து அதை கைக்கொண்டு ஜீவிக்கும்போது நமக்கு வெற்றியுள்ள வாழ்வைபெறும் பாக்கியம் உண்டாகும். மாத்திரமல்ல நாம் அவரில் நிலைத்திருக்கும் போது அவராலே பெற்ற அபிஷேகமும் நம்மில் நிலைத்திருக்கிறது. அன்பானவர்களே! நம்முடைய நிலைப்பாட்டினை உறுதிசெய்ய தேவன் நமக்கு அளிக்கும் கிருபையே இந்த உன்னத அபிஷேகம். தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டபோது தேவ ஆசீர்வாதமும் வல்லமையும் அவனை தொடர்ந்தது. இதனால் அவன் ஞானத்திலே வளர்ந்து தான் நியமிக்கப்பட்ட அந்த மேன்மையான வேலையை செய்ய தகுதியுள்ளவனானான். இவ்விதமாக தேவ ஆவியிலே அபிஷேகம் பெற்ற ஒவ்வொருவரும் அடையாளமானவர்களே அல்லவா! இந்த அபிஷேகம் தாவீது பெற்றது போல வெளித்தோற்றமானதாயிராமல், மறைவானதாக தற்றகாலிகமான ஆசீர்வாதங்களையல்ல நிரந்தரமானதாகவும் இந்த புதிய சிருஷ்டிகளுக்கு (நமக்கு) அருளப்பட்டுள்ளது. இவர்கள் நாளுக்கு நாள் கிருபையிலும், ஞானத்திலும், அன்பிலும் நிலைததிருந்து பூரணப்பட்டு கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவுக்காக வாழ, வெற்றி சிறக்க, ஜெயமெடுக்க அழைக்கப்பட்டவர்கள் இதுவே நமது அழைப்பு...

NEW BEGINNING MUS FOCUS WITH GOD → OBEDIENCE TO HIS WORD

## வெற்றிடு:-

நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே, அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் 1 யோவான் 2:25 பரிபூரணமான வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தின் விலையேற பெற்ற பரிசு இந்த நித்தியஜீவன் தான். எதை பெற்றிருந்தாலும், உலகம் முழுவதும் ஆதாயப்படுத்தினாலும் நித்தியஜீவனை இழந்து போனால் எல்லா நஷ்டமே... தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணின மேலான காரியங்களைப் பெற்றுக்கொள்ள நாம் சில காரியங்களை செய்ய வேண்டும். அவரோடு உறவுகொள்ள, வளர்ச்சியடைய அவரில் நிலைத்திருக்க, அவர் சித்தம் செய்ய, அவர் சிந்தையுடைவர்களாய் அன்பிலும், கிருபையிலும், சத்தியத்திலும், தயையிலுள்ள, கிறிஸ்துவின் பாடு அநுபவிக்கிறவர்களாயும், அவர் சிலுவையை சுமக்கவும் சிலுவையில் சிந்திய இரத்தத்தால் நம்மை சுத்திகரித்தவர்களாயும், பரிசுத்தத்தோடும், தேவபயத்தோடும், இதன்மூலமாய் உபத்திரவங்களை பொறுமையோடு சகிக்கிறவர்களாய் நற்செய்தியின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்களாயும் இருக்கடவோமாக. நித்திய ஜீவனை நமக்கு வாக்குத்தத்தமாய் கொடுக்கப்பட்டிருந்தாலும் அந்த நித்திய ராஜ்யத்தின் பங்கையடைய நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த வேண்டும். தேவன் சகல காரியங்களிலும் தம்முடைய முழு சித்தத்தின்படி செய்கிறார். ஆயினும் தேவன் வாக்கு பண்ணினதைப் பெற்றுக்கொள்ள அவரோடு இசைந்து சகல நற்காரியங்களிலும் விசுவாசத்தோடு கூடிய கிரியையில் காட்டுவது நமக்கு கொடுக்கப்பட்ட சிறந்த வாய்ப்பு ஆகும். நாம் வாழ்கையில் முன்னேற கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாயிருப்பது மிக அவசியமானது. இது நம்மைத் தாழ்த்தி முற்றிலும் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பது அவர் நமக்கு முன் வைத்துள்ள மகிமையை (நித்திய ஜீவனை) பெற கிறிஸ்துவின் இயேசுவின் சிந்தை நம்மில் நிறைந்திருக்குமேயானால் நாம் அவரைப் போலவே உலக காரியங்களுக்கு விலகி அவைகளில் நாம் சிக்கிக்கொள்ளாமல் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றச் செய்யும். வாக்குத்தத்தம் பண்ணின நித்திய ஜீவனை சுதந்தரிப்போம்!! ஜெயம் பெறுவோம்!!! வெற்றிடுவோம்!!!



"நாம் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" எபிரெயர் 3:14

கிறிஸ்துவின் அன்புடன்

சகோதரி. விண்டா ராஜாசிங்




# Obedience is a Blessing

The word ‘Obedience’ is a bitter word to many. Obeying is seen as a shackle in life. Commonly, obedience is believed to be a weaker act by many. People have the attitude of disobeying; they disobey their parents, in - laws, elders, officials, pastors and elders of church. People disobey because they had not understood the blessing it brings forth in their life. In contrast to the world belief, Bible calls it a blessing, joy and adventurous experience. From Genesis to Revelation, people who had obeyed the word of Lord had never ended up in misery. Instead. they had great journeys of adventures and joy in their life. It had always been a good blessing to them and to the society at large. Likewise, there are also numerous examples of how disobedience had turned their blessed life into cursed. I pray and wish that this article would open up your sight to see the blessing, joy and adventure in the path of obedience.

The first ever sin of mankind started with the disobedience of Eve and Adam. One disobedience had brought the misery to the entire human kind. When I was in the age of attending Sunday school, I used to blame the blunder, a major catastrophe in the human history committed by Adam and Eve just by overlooking a simple obedience of eating a fruit that was forbidden to eat. Though it might look as one small disobedience, but that one disobedience had affected the entire human kind, all had fallen into spiritual darkness, death, curse and misery. You will understand much if you see it from the other perspective. What could have happened if they obeyed the voice of the Lord? We all would be actually living a life that is more blissful and the life we have been longing to have. Our children would be very hale and healthy, loving, knowledgeable. peaceful etc.

Coming back to Adam and Eve, Yes, it is appropriate and easy to blame them for the negative consequence of their disobedience which is continuing even today. But, wait for a moment. If Adam and Eve’s disobedience had such a drastic effect in the society, then for sure, disobedience of anybody would have negative consequence. So our disobedience would have negative impact

on our family, church and the community we live. Disobedience brings forth sickness, curse and debacle in life. If the bible calls obedience as blessing, then it equally calls the disobedience as Curse. It does mean that all our disobedience has the capacity to create a darkness, death, curse and sickness in our family. Satan is like roaring like looking for someone to destroy through his schemes that attract and trap. By falling in his trap, we may go against the plan and will of God, indeed ending up being in curse. Every time, Israelites disobeyed in the wilderness they either lost the war, unity and blessing. Don't let the satan to trap you into disobedience. Obedience is equated to our blessings and relationship with God.

## Obedience is Faith

Obedience is an outcome of faith. If anybody does obey the word of the Lord it is because of their belief in the Lord. We would not obey unless we know the person who is instructing us. If we have good will and belief on them we would obey anything that person says. In our home, we obey our parents just because we know them for they do all things for our good. We never obey the voice of other people as we obey our parents because we don't know them well. We would even jump into the well/pool without knowing to swim if it was said by our more trusted person.



Likewise, our obedience is proportionate to the faith we have in our Lord. Everyone can't simply claim that they obey the Lord, because without faith it is impossible to please the Lord. You need to have faith in the Lord to obey His instructions. Unless you have the conviction of who the Lord is you can't obey Him. Anyone who doesn't know the Lord personally can't please the Lord. Hebrew 11:6 says "And it is impossible to please God without faith. Anyone who wants to come to him must believe that God exists and that he rewards those who sincerely seek him." Our obedience would not be joyful, adventurous and blessed if there is no faith in our obedience. Many Christians do lots of work just for the sake of being a Christian but not sincerely out of faith. Israelites can be the good example. Israelites came out of Egypt out of obedience to Moses, but without faith in the Lord. Their obedience without faith in the Lord ended up in death of all who came out of Egypt except Caleb and Joshua. Indeed, the bible clearly states that Caleb and Joshua had believed the Lord, His plan of deliverance and His promise. Yes, any obedience without the Lord in it, is utter waste and it could probably lead us to destruction. So better do not blindly follow the religion of Christianity without Christ in it. If our obedience to attend church, prayer and fasting is without Jesus Christ, then it would be completely void with no honor or recognition from the Lord. Obedience with faith in the Lord is much rewarded by the Lord. How is our obedience to the word of the Lord today? do we obey because we know Him as the Lord Almighty or we just do because all our christian friends and community is obeying?

Anybody who had obeyed the Word of the Lord out of faith never stopped obeying half-

way through their situations because they know whose words they are obeying nor had they never been ashamed because of their obedience. My dear brothers and sisters, "..everything that does not come from faith is sin" (Roman 14: 23). Anything that you are doing without faith in the Church and for the Lord is not acceptable before the Lord. Today many are doing lots of work for the sake of Lord and for Christianity without any faith on the Lord. Those obedience without faith shall be counted as an act of foolishness and can't be eligible for the honor from the Lord. But the obedience with the faith in the Lord is joyful, adventurous and a blessing.

## Joy in the Obedience

Often, for all of us obedience is a painful activity. But the Bible records that the obedience is an act of Joy. Be it matured or newly born Christian, if there is faith in Christ, it is an act of Joy. If there is no Christ in our obedience, then it can't be joyful. Many have been obeying God but there is no joy in their obedience. It is an act of obedience out of fear or unwilling submission. Instead, any obedience in faith out of love for the Lord brings in joy. The good example is, Jesus' obedience to the Father to come down to the earth to save the people from their sin. It was not an easy act for the son of Lord to leave all the glory and to live a lowly life for no good reason of Him. Instead, He accepted the path in joy because He knew the Lord who was instructing Him. We read in the bible that each day Jesus woke early in the morning to visit the suffering, dying and bonded people to emancipate them. Because He knew the Lord who had assigned the task, He was joyful and never grumbled upon his calling or the things He had to obey.



Today, many in our church, family and community have been obeying the Lord without any joy in their act of obedience. Their obedience is considered as Lord's punishment on them. Instead, the Lord Jesus is teaching us that the obedience that is painful will have greater joy in the end.

"…but emptied himself, by taking the form of a servant, being born in the likeness of men. And being found in human form, he humbled himself by becoming obedient to the point of death, even death on a cross. Therefore God has highly exalted him and bestowed on him the name that is above every name" (Philippians 2: 7-9). Yes, Jesus obeyed unto death with joy to save the lost souls and ended up in saving the entire mankind. His eyes were upon saving the dying people, so there was consistent joy each day. He knew His death on the cross. If He had been worrying about His walk to the cross, then He would have not really completed His ministry and the calling. Instead, His eyes were on the Lord in obedience to redeem the lost souls of the earth. And His enjoy had no bounds each day.

But today, many have accepted the painful path that is part of their God's design of their life but are not joyful in that obedience. So the Lord is encouraging you to be joyful and rejoice in the calling even though it looks painful today. Surely there shall be a great reward for those who endure joyfully in their obedience. Bear with that son, daughter, sibling or life partner, parents whom God has placed in your life even though you didn't see any the improvement in the relation or in their character. God will honor your obedience with joy much more than you have thought. "When the LORD restored the fortunes of Zion, we were like those who dreamed. Our mouths were filled with laughter, our tongues with songs of joy. Then it was said among the nations, "The LORD has done great things for them." (Psalms 126: 1&2).

## OBEDIENCE IS ADVENTUROUS

Life would be boring if there had not been any ups and downs. These ups and downs which we normally talk are those problems we face every day. Whereas with the Lord, there is no ups and downs. Instead He has always planned for adventures in life especially for His children. I mean for the children who whole heartedly obey Him. Bibles says, "He does great things too marvelous to understand. He performs countless miracles" (Job 5:9). Indeed, our God is always up to something big and novel. I always admire how the Lord made Noah and his family to handle the world's biggest adventure of flood for forty days and nights.



Noah's obedience to the word of the Lord, made him the first ship architect, Builder, sailor, disaster manager, managed all the animals on the earth under one floating shelter and so on so forth. Interestingly, Noah had never seen or heard of any flood or storm, ship, idea of sailing, no science and no geography to tackle that situation. If you visualize the moments of Noah, we would get goose bumps. He experienced adventure just because of his simple obedience to the word of Lord. If Noah had not obeyed, there wouldn't had been any adventure. The adventure

began with obedience. The Lord said to Noah, "So make yourself an ark of cypress wood; make rooms in it and coat it with pitch inside and out" (Genesis 6: 14). And the Genesis 6: 22 says, "Noah did everything just as God commanded him". His complete obedience was pre-requisite for the adventure and so it is for us.

Obedience to the Lord made him more active and vibrant. Obedience to the Lord doesn't make you dumb or lazy, instead it makes you more adventurous person. A person of inspiration to many. Noah was a person of inspiration even to this day. His obedience out of faith in the Lord is much honored and rewarded by the Lord. Many worldly Christians or critics of the Christianity consider following Christ as boring. Hitler called religion as Opium, a hallucinating drug. Yes, they all say so because they had not seen the work of the Lord. They also can't experience these adventures in Christian life - walking on the water, living amidst fierce lions, escaping the ship wrecks like Paul, turning the water into blood etc because they don't have faith and aren't willing to obey the Lord. If anybody ever talks that Christianity is boring, just think that those are the bunch of people who never want to obey the Lord. If anybody obeys, there is an interesting and amazing path of life ahead.

## Blessing in Obedience

I am much convinced to say that, obedience ends up in blessing. Even though obedience might cause much sacrifice and loss at times, it is actually for a greater blessing. A believer shared her testimony about her daughter's wedding. At one time, she came with a good marriage proposal to Pastor Rev. Israel Devadasan to get it confirmed from the Lord. After the prayer, pastor had informed her not to proceed with the proposal as it was not the will of the Lord. It was a hard news for her because she expected to get her daughter married to that boy. Though it was painful, she obeyed the Lord's word. To her surprise, after few months she got a news that the boy whom they were willing to give her daughter died in a very unpleasant way. She was no bound in praise and joy for her daughter's life and for the God's love towards them. Actually that mother was a widow and knows the pain of being a single parent and widow. So she was explicitly joyful. Yes, obedience led them into the path of blessing.

Moses knew how important obedience was for the blessing of Israel. So He was repeatedly insisting the people of Israel to obey the command of the Lord. Deuteronomy 28 talks fully about the blessing out of obedience to the Lord and curses that surround disobedience. Prophet Moses starts with saying "If you fully obey the Lord your God and carefully follow all his commands I give you today, the Lord your God will set you high above all the nations on earth" Deuteronomy 28: 1. "However, if you do not obey the Lord your God and do not carefully follow all his commands and decrees I am giving you today, all these curses will come on you and overtake you" Deuteronomy 28: 15. Moses enlists both blessings and curses. Then Moses gives the choice to the people of Israel to choose between good and bad, life and death, blessing and curse. That is between obedience and disobedience to the Lord. A choice of disobedience forfeits life whereas obedience gives life. Moses choice is," See, I set before you today life and prosperity, death and destruction. For I command you today to love the Lord your God, to walk in obedience to him, and to keep his commands, decrees and laws; then you will live and increase, and the Lord your God will bless you in the land you are entering to possess" Deuteronomy 30: 15 & 16. Likewise, those who obeyed the word of the Lord alone reached the Promised Land. Even the




Man of God, who has written this book and lead the people of Israelites out of bondage couldn't enjoy the promise land just because of his disobedience to the instruction of the Lord. When the Lord asked him to speak to the rock for the water, he hit the rock to get the water. So for that disobedience Moses couldn't enter the Promised Land.

Today, the same yardstick is applied to us. We need to choose either life or death. Let's choose life, blessing, honor and prosperity through our obedience. Obedience is indeed a joy, an adventure and a blessing. Moses says, obedience to his commandments are not hard things to follow. They are near you and easy to comprehend and adopt it into our lives. "Now what I am commanding you today is not too difficult for you or beyond your reach. It is not up in heaven, so that you have to ask, "Who will ascend into heaven to get it and proclaim it to us so we may obey it?" Nor is it beyond the sea, so that you have to ask, "Who will cross the sea to get it and proclaim it to us so we may obey it?" No, the word is very near you; it is in your mouth and in your heart so you may obey it" (Deuteronomy 30: 11-14). Yes Moses giving us idea to obey the Lord in verse 14, believe it with your heart that He is Lord, Creator and above everything. With faith, confess what you believe in the Lord, through your mouth, louder each day and at all the possible times. Then for sure your heart will not go towards disobedience.

Let's change the path from destruction to blessing by giving ourselves to obedience. There is no shortcuts or path that may give an eternal blessing. May you be prosperous in all your works through the covenant of blessing inherited through obedience to the Word of the Lord! Amen

- Bro. Densingh Joshua Israel



# சபையின் ஆராதனை ஒழுங்குகள் ஜூலை-2018

| நாள் | கிழமை | ஜெபங்களும் நேரங்களும் |
|---|---|---|
| 1 | ஞாயிறு | ஓய்வுநாள் ஆராதனை - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | பெண்கள் ஐக்கியம் - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை (சபையில்) |
| 3 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 4 | புதன் | உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம் - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 5 | வியாழன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 6 | வெள்ளி | மாலை ஆராதனை - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 8 | ஞாயிறு | ஓய்வுநாள் ஆராதனை - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | வாலிபர் கூட்டம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 9 | திங்கள் | ஆயத்த ஜெபம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 10 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 11 | புதன் | உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம் - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| | | இரவு ஜெபம் - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 12 | வியாழன் | அதிகாலை ஜெபம் - காலை 05.00 மணி முதல் மதியம் 06.30 மணி வரை (சபையில்) |
| | | அமாவாசை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| 13 | வெள்ளி | மாலை ஆராதனை - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 14 | சனி | கிராம ஊழியம் - காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை |
| 15 | ஞாயிறு | ஓய்வுநாள் ஆராதனை - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| 17 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |

| | | |
|---|---|---|
| 18 | புதன் | உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம் - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 19 | வியாழன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 20 | வெள்ளி | மாலை ஆராதனை - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 20&21 | வெள்ளி & சனி | திருச்செந்தூரில் உபவாச ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை அப்போலோ கம்ப்யூட்டர் சென்டர், ஆதித்த-னார் காலேஜ் எதிரில், வீரபாண்டிய பட்டிணம் ரோடு, திருச்செந்தூர். (Ph : 8903724440.˙.94445224760) |
| 22 | ஞாயிறு | ஓய்வுநாள் ஆராதனை - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | வாலிபர் கூட்டம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 23 | திங்கள் | ஆயத்த ஜெபம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 24 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 25 | புதன் | உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம் - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 26 | வியாழன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 27 | வெள்ளி | பௌர்ணமி ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| | | இரவு ஜெபம் - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 28 | சனி | உபவாச ஜெபம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 29 | ஞாயிறு | உபவாச ஜெபம் / ஓய்வுநாள் ஆராதனை / ஞானஸ்தானம் / இராபோஜனம்- காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| 31 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | மாதத்தின் கடைசி நாள் இரவு ஜெபம் - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;

யாத் 20:8

வாரந்தோறும் ஞாயிறு அன்று நடைபெறும்
ஓய்வுநாள் ஆராதனையில் பங்கு பெறுங்கள்!

**ஜூலை 12**
**வியாழக்கிழமை**
**அமாவாசை ஜெபம்**

**ஜூலை 27**
**வெள்ளிக்கிழமை**
**பௌர்ணமி ஜெபம்**

**குடும்பமாக பங்குபெறுங்கள் ஜெபத்தில்**
**காத்திருந்து விடுதலையோடு செல்லுங்கள்**
**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்**

RNI No.TNTAM/2914/60710

"Blessed Shall you be when you come in and blessed shall you be when you go out".
-Deuteronomy 28:6

*Because Of Your Father's God, Who Helps You, Because Of The Almighty, Who Blesses You With Blessings Of The Heavens Above, Blessings Of The Deep That Lies Below, Blessings Of The Breast And Womb.*

*(Genesis-49:25)*

**Owned and Published by Rev. V. ISRAEL DEVADASAN**
Printed by : R. Venkatesan at ANBU OFFSET PRINTERS, No.22/21, South Mada Street, Chinna Kancheepuram - 631 501 and Published from No.2-106, Agaram Main Road, Agaram Then, Mappedu Post, Selayur, Chennai - 600 073
Editor: Rev. Israel Devadasan